ஊர்கூடி தேர் இழுப்போம்

# நாங்கள்

ஒற்றுமையே எங்கள் பலம்...

இதழ் 1
மாசி 1–28
2021

**பிரதமஆசிரியர்**
க.பரணீதரன்
**இணைஆசிரியர்கள்**
வெ. துஷ்யந்தன்
செ. கணேசன்

அல்வாய் மனோகராக் கிராம ஆவணப்படுத்தல் மாதாந்த பத்திரிகை 30/-

**எமது ஊரவர்கள் அனைவருக்கும் எமது அன்பான வணக்கம்...**

"நாங்கள்" - அல்வாய் மனோகராக் கிராம ஆவணப் படுத்தல் மாதாந்த பத்திரிகை ஊடாக உங்கள் அனைவருட னும் பேசுவதையிட்டு மகிழ்கின்றோம். ஈழத்து தமிழர் வரலாற்றில் எமது கிராமத்தவர்களின் சிறப்புகள் தனித்துவ மானவை; கொண்டாட்டத்திற்குரியவை. வடபுலத்தில் உள்ள சகல சிறப்பும் பொருந்திய எமது கிராமத்திலுள்ள அனை வருமே ஏதோ ஒரு வகையில் சிறப்புப் பெற்றவர்களாக திகழ் கின்றார்கள். அடிப்படை வசதிகள் அற்ற ஒரு கிராமமாக ஆதி காலத்தில் விளங்கிய எமது கிராமம் எமது முன்னோர்கள் ஒவ்வொருவரின் ஆளுமைத்திறனாலும் இன்று பார் போற்றும் கிராமமாக திகழ்ந்து வருகின்றது. எமக்கென்று எம்மவர்களுக்கென்று தனித்துவமான ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாற்றை நாம் மறக்கக்கூடாது அவற்றை சரியான வகையில் பதிவு செய்தல் என்பது அவசியமானது; அடுத்த தலைமுறைக்கு அதனை சரியான வகையில் கையளிக்க வேண்டியது எம் அனைவரின் கடமையுமாகும். அந்த வகை யில் எம் கிராமத்தை ஆவணப்படுத்தல் என்பது அவசிய மாகும். அதற்காக நீண்ட காலமாக என் மனதில் புடமிட்டு இருந்த எண்ணத்தின் வெளிப்பாடாக இந்த பத்திரிகை இன்று வெளியாகின்றது. இந்த பத்திரிகை நம் அனைவரினதும் பத்திரிகை. இங்கு எம் ஊரின் சகல விடயங்களும் பிரசுர மாகும். நேரான விடயங்களையும், ஊரில் சகலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களையும் நிச்சயம் இங்கு பிரசுரிப் போம். பிரச்சினைக்குரிய விடயங்கள் இங்கு பிரசுர மாகாது என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த பத்திரிகையில் எம் ஊரவர்கள் அனைவர் பற்றிய தகவல்களும் வெளியாகும். தயவு செய்து உடனடியாக "அவரைப் போடவில்லை, இவரைப் போடவில்லை" எனக் குறைப்படாதீர்கள். எல்லோரைப்பற்றியும் அவர்களது ஆளுமைத் திறன் பற்றியும் கட்டாயம் இங்கு வெளியாகும். ஒரு இதழில் குறித்த துறைகள் சார்ந்த ஒவ்வொருவர் அல்லது இருவர் பற்றியே வெளியிட முடியும். நிச்சயமாக ஒரு வருடத்துக்குள் குறைந்தது 100 ஆளுமைகள் பற்றி இங்கு வெளிவரும். உங்கள் அனைவரிடமும் பணிவாகவும் அன்பாகவும் கேட்பது இதனைத்தான்: "நாம் அனைவரும் ஒற்றுமையாக இந்த இதழை தொடர்ந்து கொண்டு வர வேண்டும், இங்கு முரண்பாடுகள் வேண்டாம், இது நம்மவரின் வரலாறு, நாளைய இளைஞர்களுக்கு எம் முன்னோர்கள், எம்மவர்கள் பற்றிய செய்தியை வழங்க வேண்டியவர்களாக நாம் அனைவரும் இருக்கின்றோம்" இந்த இதழ் எந்த வகையிலும் இலாப நோக்கம் கருதி வெளி வரவில்லை. அச்சு செலவின் பாதி விலையிலேயே இதை விநியோகிக்கவுள்ளோம். ஏனெனில் இலவசமாக கொடுக்கும் பொருட்களுக்கு மதிப்பு இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். முதல் இதழ் இலவசமாக உங்கள் வீடு தேடி வரும். அடுத்த இதழில் இருந்து எமது ஊரில் உள்ளவர்கள் கடைகளிலும், க.பரணீதரன், வெ.துஷ்யந்தன், செ.கணேசன் ஆகியோரிடமும் நீங்கள் இதை நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம். இந்த பத்திரிகை நம் அனைவரினதும் வீட்டில் பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணப் பத்திரிகை. அடுத்த இதழில் இருந்து எமதூர் சிறுவர்களுக்கென ஒரு பக்கத்தை ஒதுக்கவுள்ளோம். அதில் எம் சிறுவர்களது ஆக்கங்கள்(கவிதை, சிறுகட்டுரை, பொதுஅறிவு, பாடல்) என்பன இடம்பெறும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஆக்கங்களை ஊக்குவித்து எழுதுவித்து எமக்கு அனுப்பி வையுங்கள். மாதாந்தம் எமது ஊர் சார்ந்த நிகழ்வுகள், விளையாட்டு செய்திகள், அஞ்சலிகள், புதிய செயற்பாடுகள், விருதுகள் பட்டங்கள் தொழில் பெறுபவர்கள் பற்றிய செய்தி என எமதூர் சார்ந்த செய்திகளை தாங்கி "நாங்கள்" வெளியாகும். குறித்த மாதத்துக்குரிய பத்திரிகை அடுத்த மாதம் 15 ஆம் திகதி வெளியாகும். குறித்த மாதத்தில் ஏதாவது செய்திகள் தவற விடப்பட்டால் அடுத்த மாதம் அது நிச்சயம் பிரசுரமாகும். எனவே தயவு செய்து சலசலப்புகளை ஏற்படுத்தாது தகவல்களை வழங்கி உதவுமாறு உங்கள் அனைவரையும் பணிவாக கேட்டுக் கொள்கின்றோம். இந்த பத்திரிகை யாரையும் இருட்டடிப்பு செய்யாது. மூன்று தனி நபர் முயற்சி என்பதால் சில சமயம் குறித்த மாத தகவல்கள் தவற விடப்பட்டால் அடுத்த மாதம் வெளியாகும். முக்கியமாக இதற்காக குறித்த ஆசிரியர் குழாம் தமது பல நாட்களை செலவழித்தே இதை சேவை நோக்கிலேயே வெளியீடு செய்யவுள்ளது. தயவு செய்து உங்கள் குற்றங்கூறலை விடுத்து ஆக்க பூர்வமான கருத்துக்களை தெரிவித்து நம் அனைவரின் பதிவுக்கும் வழிகோலுங்கள். விரும்பியோர் 12 இதழ்களுக்கான சந்தாவாக 300 ரூபா செலுத்தினால் உங்கள் வீடு தேடி "நாங்கள்" வந்து சேரும். நீர்க் குமிழி போன்றது எமது வாழ்வு. வாழுகின்ற காலத்தில் அனைவரும் ஒற்றுமையாக அன்பாக வாழ்வோம். எமது பலம் ஒற்றுமையே அதை சிதைய விடாது பாதுகாப்போம். கல்வியே எங்கள் மூலதனம் பெற்றோரே உங்கள் பிள்ளைகளின் கல்வி தொடர்பாக கூடிய சிரத்தை எடுங்கள். இப்பத்திரிகையில் ஏதாவது தகவற் பிழைகள் ஏற்பட்டால் அவற்றை சுட்டிக்காட்டி சுருக்கமாக வாசகர் கடிதம் எழுதினால் அவை பிரசுரமாகும். உங்கள் அனைவரது ஆதரவுடன் நாங்கள் பயணிப்போம்.

**– க.பரணீதரன்**

**தொடர்புகளுக்கு:**
கலைஅகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
email ; jeevanathy@yahoo.com

# அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயம்

■ வி.செந்தூரன் ■



ஓங்கார ரூபன் உறையா லடிக்கோயில்
நீங்காது தொண்டுபுரி நேயர்களின் - ஆங்காரம்
போக்கி யவர் வாழ்வு பொலியப் புகழ்வாரைக்
காக்குமவன் இன்னருளே காண்.

- சைவப்புலவர்

இலங்கைத் திருநாட்டின் வடமாகாணத்தில் யாழ்ப் பாணம் சைவமும் தமிழும் தழைத்தோங்கிய அல்வை யம்பதியின் ஊரின் எல்லையில் இருந்து பாலகணபதி மூர்த்தமாக அருள் பாலித்துக் கொண்டிருப்பதே அல் வாய் சாணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயமாகும்.

ஆலய வரலாற்றை எடுத்து நோக்கும்போது, ஆரம்பகால வழிபாடு இயற்கை வழிபாட்டுடன் கூடிய தாக பெரு விருட்சங்களையும் அவற்றுக்குக் கீழ் சூலங்கள், கற்கள் என்பவற்றை வைத்து வழிபடும் தன்மையும் கொண்ட மரபு பேணப்பட்டது. இயற்கை வழி பாட்டுடன் கூடிய சிறுதெய்வ வழிபாடுகள் காலப் போக்கில் சைவப்பாரம்பரியத்துடன் கூடிய விநாயக வழி பாடாக மாற்றம் பெற்றது. திருவெம்பா நோன்பினை பிரதானமாக மேற்கொண்டு கிராமக் குழுமியக் குடும்பங்களை பத்து பகுதிகளாகப் பிரித்து பத்து நாட் களும் விழாக்கள் நடைபெற்று திருவாதி ரைத் தீர்தமும் சிறப்புற நடைபெற்று, எழுந்தருளி விநாயகர் கிரா மத்தை ஆட்சிக்குட்படுத்தி ஊர்வலம் வரும் நிகழ்வும் தொன்றுதொட்டு இன்றுவரை நடை பெறுவது ஆலயத்தின் தொன்மையையும் எடுத்தியம்புகின்றது.

*1949* ஆம் ஆண்டு வைகாசி மாதம் பூர்வபட்ச பூச நட்சத்திரத்தில் மூல மூர்த்தியாகிய "பாலகணபதி" ஆலயத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டது. கிராமத்தின் எல்லையில் இருந்து கூர்விழிப்பார்வையால் ஊர்மீது அருளாசி வழங்கி நயனதீட்ஷைவழங்கி ஊர் மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார் பாலகணபதி. இதனையே சைவப்புலவர் சி.வல்லிபுரம் அவர்கள் தன்னுடைய வெண்பாவிலே "மீக்குயரும் கோயிலு றைந்தூர் முழுதும் கூர் விழியால் பார்ப்பவனை வாயி னால் நாள்தோறும் வாழ்த்து" என குறிப்பிட்டுள்ளார்.

ஆலயத்தின் சிறப்பை எடுத்து நோக்கும்போது மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் எனும் சிறப்புக்களை உடையதாய் விளங்கி வருகின்றமை கருத்திலிடப்பட வேண்டிய தொன்றாகும். தவயோக ஞானி யோகர் சுவாமிகள் ஆலயத்தில் யோக நிலை நின்று அருள் வழங்கினார் என்பதும் ஆலயத்தின் சிறப்பை எடுத்தி யம்புகின்றது. ஊரின் எல்லையிலே மேற்குப் புறமாக ஆலய அமைவிடம் ஆலமரம் முதல் தரிசனத்துக்குரிய தாக விளங்குகின்றது. ஆலயத்தின் வடகிழக்கு மூலை யில் புனித தீர்த்தக்கிணறு அமைந்துள்ளது. சித்திரா பூரணையிலே எம்பெருமான் பாலகணபதி தீர்த்தக் கிணற் றிற்கு தீர்த்தமாட எழுந்தருளுவார். மேலும் மார்கழித் திருவாதிரையிலும் பாலகணபதி தீர்த்தமாடி ஊர்வலம் வருவது தீர்த்தத்தின் சிறப்பை எடுத்தியம்புகின்றது.

ஆலயத்தின் பெயர் சாமணந்தறை என்ற சிறப்புப் பெயரால் குறிக்கப்படுவதற்கு, சாமணம் என்பது பசுமை நிறைந்த சோலைகளை குறிப்பதனால் சாணந் தறை என்பது மருவி சாமணந்தறையாகியிருக்கலாம் என்பது ஐதீகம். இவ் ஆலயத்துக்கு பெருமை சேர்க்கும் வகையில் தெற்குப்புறமாக நடராஜப்பெருமான் பஞ்சகிருத்திய நடனம் செய்யும் ஈமச்சடங்குக்குரிய வெளி அமைந் துள்ளதை குறிப்பிடலாம். ஒரு புறத்தில் உலகை இயங்க வைக்கும் சிவன் நடனமிடும் வெளியும் மறுபறுத்தில் ஓம் எனும் பிரணவத்தில் பாலகணபதியும் வீற்றிருந்து அருளாசி செய்வது ஆலயத்தின் சிறப்பை பெரிதாக்கி நிற்கின்றது.

ஆலய வளர்ச்சிப் போக்கில் பாலகணபதி விக்கிரகம் பிரதிஷ்டை பிராமணக்குருக்களின் பூஜை முறைகள் என்று சைவ ஆசாரத்துடன் ஆன்மிகம் தழைத் தோங்கி படிப்படியாக கட்டடங்கள் அமையப் பெற்றன. *1965* ஆம் ஆண்டியே பெரிய காண்டாமணிக் கோபுரம் அமைக்கப்பட்டது. ஆலய மூலஸ்தானம், மகா மண்டபம், தரிசன மண்டபம், சுற்று மதில்கள், வெளி மண்டபம், வசந்த மண்டபம், ஆலயமடம் என்பன காலப் போக்கிலே பல அடியார்களால் மனமுவந்து வழங்கப் பட்டதுடன் *1968* ஆம் ஆண்டு ஆவணிமாதம் மிருக சீருட நட்சத்திரத்திலே ஆலயம் கும்பாபிஷேகம் செய்யப் பட்டது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து தமிழ் நாட்டைச் சேர்ந்த குருமகாசந்நிதானம் குன்றக்குடி அடிகளார் ஆலயத்துக்கு வருகை தந்து ஆசி வழங்கியமை வரலாற்று நிகழ்வாகும். காலப் போக்கில் முருகன், பிரதிஸ்டை செய்யப்பட்டு அஷ்ட தேவரும் தீர்த்தமாடும் நிகழ்வும் நடைமுறைக்கு வந்தன.

*1986* ஆம் ஆண்டு இரண்டாவது கும்பாபி ஷேகம் மஞ்ச குண்ட அமைப்பிலேயே மிக சிறப்பாக நடைபெற்றது. இக்காலகட்டத்திலே வைரவர், நாகதம்பிரான், நவக்கிரக ஆலயம், ஆதித்தெய்வங்க ளுக்கான மண்டபம், சண்டேஸ்வரர் ஆலயம் ஆகியன பிரதிஸ்டை செய்யப்பட்டு ஆலயம் ஒரு பரிமாண வளர்ச்சியடைந்தது எனலாம். மேலும் பத்துநாட்கள் அலங்காரத்திருவிழா சித்திரா பூரணையை தீர்த்த மாகக்

கொண்டு மாற்றம் பெற்றதோடு இளைஞர்க ளால் தீர்த்தத்திருவிழாவிற்கு மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஆலய அனுட்டானங்கள், சைவ கைங்கரியங் களிலும் பலரும் நெறி நின்று சைவப்பாரம்பரியம் கட்டிக் காத்ததின் பேறாக மூன்றாவது கும்பாபிஷேகம் காலம் ஆலய அலங்கார உற்சவத்தை மகோற்சவ கிரியையாக மாற்றுவதற்கு வழிகோலியது. மூன்றாவது கும்பாபிஷேகம் விஷவருஷம் பங்குனித்திங்கள் சுப முகூர்த்தத்தில் குட முழுக்கு செய்யப்பட்டது. இக்கால கட்டத்தில் மகாலஷ்மி அம்மன் ஆலயம், கொடித் தம்பம், யாகசாலை, தம்பப்பிள்ளையார், புதிய தேவர் சபை என்பன அமைக்கப்பட்டன. 2002 ம் ஆண்டி லிருந்து இவ்வாலயம் கொடித்தம்பத்திலேயே துவா ரோகணம் கண்டு விம்ப பூஜையும் வசந்த மண்டப பூஜையும் என சிறப்பாக மகோற்சவம் செய்யும் ஆலய மாக மிளிர்ந்தது. விநாயகர் எழுந்தருளியோடு பஞ்சமுக விநாயகர், மகாலஷ்மி அம்மன், வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியன், சண்டேஸ்வரர் எழுந்தருளி களும் உபகரிக்கப்பட்டன. 2008 ம் ஆண்டிலே வசந்த மண்டம் மிக அழகிய சிற்ப வேலைப் பாடுகளுடன் கூடிய மண்டபமாக புனருத்தாரணம் செய்யப்பட்டு உரு வாக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டு ஸ்ருமண மண்ட பம் மீள் நிர்மானிக்கப்பட்டது. தரிசன மண்டபமும் சிறப்பான தூண்களோடு மீள் உருவாக்கம் பெற்றது. காலத்துக்கு காலம் வந்த பரிபாலன சபையினர் உள் மண்டபங்களை பூர்த்தியாக்கினர். 2013 ஆம் ஆண்டு தெற்குவாசல் மண்டபம், குருக்கள் வாசஸ்தலம் என்பன அமைக்கப்பெற்றன. புதிய தேரும் உபகரிக்கப்பட்டது.

இக்காலகட்டத்திலே ஆலயத்தில் பல பூஜை முறைகளும் மாற்றம் பெற்றதோடு பல விழாக்களும் அடியவர்களின் உபயமாக ஆரம்பிக்கப்பட்டன.

12 மாத சதுர்த்திகளும், மணவாளக்கோலம், தைப்பூசம், தைப்பொங்கல், பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டா தினம், சித்திரை வருட பிறப்பு, சங்கிராந்தி பூஜை, மகோற்சவம், அண்ணமார் பொங்கல், வரலஷ்மி பூஜை, ஆதிமணி ஆரோகணம், நவராத்திரி, கந்தசஷ்டி விழா, பிள்ளையார் கதை, கார்த்திகைத்தீபம், தீபாவளி, மார்கழி திருவெம்பாமை, திருவாதிரை ஊர்வலம், கதிர்காம கந்தன் உற்சவம் என்று பல உப விழாக்கள் இவ்வாலயத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றன.

ஊர் மக்களின் கல்வி வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, பால கணபதியின் அருளாசி இவற்றோடு ஊர் மக்களின் ஏகோபித்த அபிலாஷைகளோடு 2013 ம் ஆண்டு கார்த்திகை பூரணை(கார்த்திகை தீபம்) நாளிலே ஆலடி விநாயகருக்கு பஞ்சதள இராஜகோபுரம் அமைப்பதற்கான அத்திவாரம் இடம்பெற்றது. 2016 ஆம் ஆண்டு பங்குனித்திங்களிலே பாலஸ்தானம் செய்யப்பட்டது.. 2018 ஆம் ஆண்டு தைங்திங்களிலே பஞ்சதள இராஜகோபுரத்துடன் நவகுண்டங்களுடன் இரண்டு காண்டமணிக் கோபுரங்களுடனும் மூலஸ்தான பண்டிகை துவிதள பண்டிகையாகவும் கூடிய சிற்பங் களுடன் நான்காவது கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அழகிய சிற்பங்களுடன் கூடிய திரு மஞ்சமும் எம்பெருமானுக்கு உபகரிக்கப்பட்டது. கொடி யேற்றம், மாம்பழத்திருவிழா, மதுரத்திருவிழா, பூந்தண்டிகைத்திருவிழா, திருவிளக்கு பூஜை, வசந் தோற்சவம், திருமஞ்சம், சப்பரம், மிருக யாத்திரை, தேர்த்திருவிழா, வைரவர் சாந்தி, வருடாந்த மகேஸ்வர பூஜை என ஆலய மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆலயத்தின் மூலஸ்தானத்திலே பால கணபதி கருங்கல் விக்கிரகமாக இருந்து அருள்பாலிக்க ஸ்ருமணமண்டபம் வாயிலிலே செல்வ விநாயகர் உருவச் சிலையும், தெற்கு வாயில் மண்டபத்திலே மாம்பழக் காட்சியும், வசந்த மண்டபத்திலே நடன விநாயகர் உருவச்சிலையும், ஆலய இராஜகோபுர முகப்பிலே பிரமாண்டமான சித்தி விநாயகரும், ஆலமர நிழலிலே உண்டியல் பிள்ளையாரும் அடியவர்களின் வழி பாட்டிற்கு உரியவர்களாக அமைகிறார்கள்.

சைவதத்துவங்களையும், யோகர் சுவாமி வழிபட்ட வரலாற்றையும் பிள்ளையார், சிவன், முருகன், நாராயணன், தட்சிணா மூர்த்தி, மகாலஷ்மி, பூமாதேவி, சாயாதேவி, இராஜராஜேஸ்வரி, சூரியன், சந்திரன், தன லஷ்மி, துவார பாலர்கள், கோபுரம் தாங்கிகள் என நூறு சித்திரப்பாவைகளுடன் கூடிய இராஜகோபுரம் ஊரின் எல்லையில் இருந்து காட்சியளிப்பது ஆலடியான் அனுக் கிரகத்தை எடுத்தியம்புகின்றது என்றால் அது மிகையாகாது.

## யாழ்ப்பாண பல்கலைக்கழக 35 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்றுக் கொண்டு எமது ஊருக்கு பெருமை சேர்த்த எம்மவர்கள்..



BSc Hons in Computer Science பட்டம் பெற்றுக் கொண்டார்
யோகரத்தினம் சௌமியா



PGD.Edu(distinction) பட்டம் பெற்றுக் கொண்டார்
முரளீதரன் லக்ஷனா




PGD.Edu(Merit) பட்டம் பெற்றுக் கொண்டார்
சுதாஜினி ரமணன்



PGD.Edu(distinction) பட்டம் பெற்றுக் கொண்டார்
அரவிந்தன் ஷாளினி

# வைத்திய பூபதி டாக்டர் சு.வேலும்மயிலும்

■ கலாநிதி த. கலாமணி



எங்கள் கிராமம் இன்று அல்வாய் கிராமசேவகர் பிரிவில் அடங்குகிறது. எங்கள் கிராமத்தின் வரலாறு பதிவு செய்யப்பட வேண்டியது. இவ்வாறு எமது வரலாற்றைப் பதிவு செய்கின்ற போது எமது கிராமத்திற்கு பெருமை தேடித்தந்த முன்னோர்களை நினைவுகூர வேண்டியது அவசியமாகும். இவ்வகையில் வைத்திய பூபதி டாக்டர் சு.வேலும் மயிலும் அவர்கள் எமது மண்ணின் மைந்தர்களுள் முதன்மை பெறுகின்றவர்களுள் ஒருவராவார்.

எமது ஊர் கல்வி, கலைகளுள் சிறந்து விளங்குகின்றது. எமது ஊரில் ஆறு அல்லது ஏழு தலைமுறைகளுக்கு முன்னதாகவே கல்விப் பாரம்பரியமும் கலைப் பாரம்பரியமும் வேர்கொண்டிருந்தமையாலேயே இன்று எமது ஊர் இத்துணைச் சிறப்பாக விளங்குகின்றது. இப்பாரம்பரியத்தின் வழியே மருத்துவப் பாரம்பரியம் ஒன்றின் உருவாக்கம் பற்றிச் சிந்திக்கின்றபோதே டாக்டர் வேலும் மயிலும் அவர்கள் எமது ஊரின் வைத்தியப் பாரம்பரியத்தின் மூல வேராக விளங்குகிறார்.

டாக்டர் வேலும்மயிலும் அவர்கள்சுந்தரம் - தெய்வானைதம்பதியினருக்கு *24.02.1930* இல் கனிஷ்ட புத்திரனாகப் பிறந்தார். இளமைப் பருவத்தில் கல்வியிலும் விளை யாட்டுத்துறையிலும் மிகுந்த ஈடு பாடு கொண்டவராக விளங்கினார். இவர் அல்வாய் மனோகரா விளை யாட்டுக் கழகத்தின் முன்னணி உதை பந்தாட்ட வீரரும் கரப்பந்தாட்ட வீரரும் ஆவார். இவரின் சிறந்த விளையாட்டு காரணமாக, அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் பல சுற்றுப்போட்டிகளில் வெற்றி பெற்றது.

இவர்யாழ்ப்பாணம்இலங்கா ஆயுர்வேதக் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் வைத்தியம் கற்று **1951** ஆம் ஆண்டு வைத்திய கலாநிதி எனும் பட்டம் பெற்றார். அதனைத் தொடர்ந்து **12.11.1951** அன்று தமது இல்லத்தில் சுந்தரவேல் வைத்திய சாலையை முதன் முதலில் நிறுவினார். இதன் பின்னர் வல்வெட்டித் துறை, மல்லாகம் ஆகிய இடங்களிலும் “சுந்தரவேல் வைத்தியசாலை” எனும் பெயரில் மருத்துவ சேவை நிலையங்கள் நிறுவப்பட்டன. அல்வாய் கிராமத்தில் முதன் முதலில் தகைமை பெற்ற வைத்திய கலாநிதி டாக்டர் சு.வேலும்மயிலும் அவர்களே. டாக்டர் த.துரைராசா, டாக்டர் ஈ.சுந்தரேஸ்வரன், டாக்டர் கோ.சபாநாதன் ஆகியோருக்கு குருநாதராக விளங்கி அவர்களை உருவாக்கினார். இவர்களைத் தொடர்ந்து வே.கணேசவேல், து.இராஜவேல், சு.மதுராங்கி, சு.சுபாஸ்கரன், ர.ஜெனுசுன், ர.மாதுசா, யோ.லக்ஸ்சனா என ஒரு வைத்திய பரம்பரை உருவாக மூல காரணமானவர் டாக்டர் சு.வேலும் மயிலும் அவர்களே.

டாக்டர் வேலும்மயிலும் அவர்கள் குழந்தை வைத்தியத்திலும் மகப்பேற்று வைத்தியத்திலும் பொது வைத்தியத்திலும் சிறந்து விளங்கினார். வாழ்க்கை வசதி குறைந்தவர்களுக்கு இவர் இலவசமாகவே வைத்தியசேவையை வழங்கினார். மருந்துகளையும் கூட இலவசமாக வழங்கினார். இதனால் இவரிடத்தில் மக்களுக்கு நல்ல நம்பிக்கை

டாக்டர் அவர்கள் பல் வேறு சமூக நிறுவனங்களிலும் சமய நிறுவனங்களிலும் பொறுப்பான பதவிகளை வகித்துவந்ததோடு மக்களுக்கான சிறப்பான சேவைகளையும் வழங்கினார். ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் என பல்வேறு நிறுவனங்களுக்கும் இவரது உதவி கிடைத்து வந்தது. இதனால் நல்ல சமூகத் தொடர்பாளராக இவர் விளங்கினார். இவரது சேவை மனப்பாங்கு பலராலும் விதந்து போற்றப் பட்டது. இதன்பேறாக அல்வாய் ஊரின் முதலாவது சமாதான நீதவானாக இவர் நியமனம் பெற்றார். சமாதானசபை, ஆயுர்வேத பாது காப்புச் சபை, அபிவிருத்திச்சபை, இணக்கசபை, கிராம முன்னேற்றச் சங்கம், சமூகசேவைச் சங்கம், குடும்பத்திட்ட ஆலோசனைச்சபை, சனசமூகநிலையம், ஆலயபரிபாலன சபை ஆகியவற்றின் பிரதான நிர்வாகியாக விளங்கிய இவர் தமது



வைத்தியசேவைக்கு மத்தியிலும் ஓய்வு ஒழிச்சலின்றி இந்நிறுவனங்களினூடாக மக்களுக்காக உழைத்தார்.

இவருக்கு சுந்தரவேல், கணேசவேல் என இரு ஆண் பிள்ளைகளும் தெய்வமதி, வசந்தமதி என இரு பெண் பிள்ளைகளும் உள்ளனர். இவர் தமது மனைவி மீதும் பிள்ளைகள் மீதும் அளவில்லாத அன்பு கொண்டு சிறந்த குடும்பத் தலைவனாகவும் விளங்கினார். தமது சகோதர சகோதரிகள், மைத்துனர்கள், மருமக்கள் என தமது உறவினர்கள் பலருக்கும் வழிகாட்டியாக விளங்கி அவர்களின் நலன்களையும் கவனித்து வந்தார். இவர் அமரத்துவம் அடைந்த போது இவரின் இறுதிக் கிரியைகளில் பெருந்திரளான மக்கள் ஒன்றுகூடி இவருக்கு அஞ்சலி செலுத்தியமையே இவர் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தார் என்பதனை எடுத்துக் காட்டுவதாகும்.

அது ஒரு காலம்

# ஏமது ஊர் வெட்டைகள்

செல்லக்குட்டி கணேசன்

இருநூறு ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றைக் கொண்ட எமது கிராமம் ஆரம்பத்தில் அல்வாய் தெற்கு என்றும் பின்னர் அல்வாய் என்றும் தற்பொழுது அல்வாய் மனோகரா என்றும் அடையாளப்படுத்தப்பட்டு அழைக்கப்பட்டு வருகிறது. ஒரு சீரான எல்லைகளைக் கொண்டிருக்கின்ற எமது கிராமத்தில் முந்நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இக் கிராமமானது பல குறிச்சிகளைக் கொண்டது. அக் குறிச்சிகளில் வாழ்ந்த மக்கள் உறவு முறையில் மிகவும் நெருக்கமானவர்களாக இருந்ததனால் கூட்டுக் குடும்பங்களாகவே வாழ்ந்து வந்தனர். அக் குறிச்சியில் ஒருவர் தன் தொழில் விருத்தி, ஆளுமை விருத்தியால் அக்குறிச்சியில் உள்ள காரியங்களில் (நன்மை தீமை) எல்லாம் முன்னின்று செயற்படுவார். அவரை ஏற்று அவரின் வார்த்தைக்கு மரியாதை கொடுத்து மற்றவர்கள் பின் செல்வர். இச் செயற்பாட்டினால் எமது கிராமத்தைச் சேர்ந்த பலருக்குத் தனித்துவமான வரலாறுகள் உண்டு. அவர்களின் வரலாறுகளை அடுத்த தலை முறைக்கு கையளிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் மூத்த பிரஜைகளுக்கு உண்டு.

இவ்வாறுபல குறிச்சிகளிலுமுள்ள ஆளுமைகள் ஒன்று சேர்ந்து எமது கிராமம் பற்றி எம சமூகம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். சிலர் எமது கிராம மட்டத்துடனேயே தேங்கினர். மிகக் குறைந்த எண்ணிக்கையுடையவர்களே கிராமம் கடந்து சமூகம் கடந்து செயல்பட முற்பட்டனர்.

எமது கிராமம் பற்றிச் சிந்தித்தவர்கள் எங்களுடைய பாரம்பரியத் தொழிலை ((சீவல் தொழில்) தங்களுடனேயே நிறுத்தி விட வேண்டுமென்ற பட்டறிவின்பால் தங்களுடைய பிள்ளைகளை கல்வியிலும் விளையாட்டிலும் கலைச்செயற்பாட்டிலும் ஈடுபட வழி காட்டினர். முதலில் கல்வி பின்னர் விளையாட்டு என்ற கருத்தோடு ஒன்றினைந்த இவ்வாளுமைகள் கல்விக்கான வழிகளையும் விளையாட்டுக்கான வாய்ப்புகளையும் தமது பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்தனர். அதன் ஒரு கட்டமாக அந்தந்த குறிச்சிக்கு அருகேயுள்ள வெறும் காணிகளை பிள்ளைகள் விளையாடுவதற்கு ஏற்ற வகையிலே செப்பனிட்டு ஒழுங்கு செய்து கொடுத்தனர். அதே போன்று அக்காலத்து இளைஞர்களும் எமது கிராமத்துக்குட்பட்ட வெட்டைக் காணிகளை சீர் செய்து விளையாட ஏற்பாடு செய்தனர். அதனால் பல வெறும் காணிகள் விளையாடுவதற்குரிய “மைதானங் களாக” மாறின.

வெட்டைக் காணியின் பரிமாணத்தைப் பொறுத்து விளையாடுகின்ற பருவத்தினரும் விளையாட்டுக்களும் வேறுபட்டன. சிறுவர்கள் ஒரு வெட்டையிலும் இளைஞர்கள் இன்னொரு வெட்டையிலும் பெரியவர்கள் மனோகரா மைதானத்திலும் விளையாடுவார்கள். மனோகரா மைதானம் எமது கிராமத்திற்கு பொதுவான மைதானம் ஆகும். இது எமது சன சமூக நிலையத்தின் மேற்பார்வைக்குட்பட்டது. மற்றையவை யாவும் தனியாருக்குச் சொந்தமான நிலப்பரப்பாகும். இவ் வெட்டைகளில் விளையாடும் போது சிறுவர்களை இளைஞர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக பெரியவர்கள் இணைந்து கொள்வதுமுண்டு. அதேவேளை அரச நெருக்கடிகள் (ஊரடங்கு) ஏற்படும் போது இளைஞர்களும் பெரியவர்களும் பாதுகாப்புக் கருதி சிறிய சிறிய வெட்டைகளை நாடி வருவர். இவ்வெட்டைகளில் பருவ காலத்துக் கேற்ப (சீசன்) உதைபந்தாட்டம், மென்பந்து துடுப்பெடுத் தாட்டம், கரப்பந்தாட்டம், குண்டுப்பந்து, கோட்டுப்பந்து, கிட்டி அடித்தல் (எழுப்புக்கிட்டி, தெண்டல் கிட்டி) யாடி, சடுகுடு, றைற்றோ, கிந்தி அடித்தல், அடிச்சுத் தொட்டு ஓடுதல், கள்ளன் பொலிஸ், துணி போட்டு ஓடுதல், மாபிள் சுண்டுதல், கரம், டாம், சோடாக்கரண்டி சுண்டுதல், ஆடு புலி ஆட்டம், கல்லுக்குத்தி போன்ற விளையாட்டுக்களும் விளையாடுவர்.

இவ்வாறான விளையாட்டுக்களை நாம் விளையாடிய வெட்டைகள் பல உண்டு. அவையாவன நொச்சியடி வெட்டை உலக்கந்தோட்டம் வெட்டை, உதிரையடி வெட்டை, கைவிரைவெட்டை, குமாரியோடை வெட்டை, தச்சன் ஒல்லை வெட்டை, மீனாட்சி பாதி வெட்டை ஆரிச்சியாவளவு வெட்டை, சுட்டியந்தறை, மூன்றாம் பனையடி வெட்டை மயிலிட்டி வெட்டை என்பனவாகும்.

இவ்வெட்டைகளில் மனோகரா மைதானத்திற்கு அடுத்தபடியாக பெரும் வெட்டையாக இருந்தது நொச்சியடி வெட்டையாகும். இவ்வெட்டையில் விளையாடிய பலர் கல்வியிலும் விளையாட்டிலும் மிகப்பெரிய சாதனைகளைப் படைத்து எமது கிராமத்திற்கு பெருமை சேர்த்தவர்களாவர். இவ்வெட்டைகளில் ஒன்று இரட்டைத் தவிர மற்றவையெல்லாம் குடிமனைகளாக உள்ளன.


இவ்வெட்டைகளில் சுட்டியந்தறை (வெட்டை) நிறைந்த பனை மரங்களால் நிறைந்திருந்தன. இங்கே தாயக் கட்டை உருட்டுதல் கடதாசிக்கூட்டம் விளையாடுதல், கரம், டாம் விளையாடுதல், ஆடுபுலி ஆட்டம் போன்ற விளையாட்டுக்களை விளையாடுவார். இதனை உள்ளக விளையாட்டு மைதானம் என்று நாங்கள் அழைப்போம். பனைமர நிழல்கள் கூரையாக இருக்கும். பாடசாலை விடுமுறைநாட்களில் காலை தொடக்கம் மதியம் வரை இவ்விடம் களைகட்டியிருக்கும். இவ்விடமானது இன்று அடையாளத்திற்கு கூட ஒரு பனைமரம் இல்லாத இடமாக இருப்பது மிகுந்த கவலையே. இவ்விடத்தின் அமைவிடம் மனோகரா சன சமூக நிலையத்திற்கு முன்னால் உள்ள காணியாகும்.

இவ்வெட்டைகள் யாவும் (சுட்டியந்தறை தவிர்ந்த) பட்டம் விடுகிற சீசன் வரும் போது (மார்கழி நடுப் பகுதியில் இருந்து தைப்பூசம் வரையான காலப்பகுதி) களை கட்டியிருக்கும். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை தங்களுக்கு அருகில் உள்ள வெட்டைகளில் பட்டம் ஏற்றி அழகு பார்ப்பர். சிலர் பட்டம் ஏற்றி தமது வீடுகளில் உயரமான பனை மரங்களில் வில் பூட்டி உயர விடுவார்கள்.

அது ஒரு காலம். அக்காலம் மீண்டும் வர முடியாது. அதனை எமது அடுத்த தலை முறையினருக்கு கையளிப்பது எமது பொறுப்பாகும். இவை தாம் எமது கிராமம் கல்வியில் விளையாட்டில் கலைபண்பாட்டில் முன்னே நிற்பதற்கான காரணங்கள் என்பது மிகையான கூற்று அல்ல.

# வாழும் “சைவம்” : அமரர் ச. சிவகுரு அவர்கள் பற்றிய நினைவோட்டம்

கலாநிதி த. கலாமணி



அல்வாய்க்கிராமத்திலும் அதனை அண்டிய கிராமங்களிலும் “சைவம்” என்ற பெயரைக் கேட்டதும் நினைவில் வருபவர் அமரர் “சைவம்” சிவகுரு ஆசிரியர் அவர்களாவார். “சைவம் அமரராகி இன்று ஏறத்தாழ மூன்று தசாப்தங்கள் ஆகின்றன. ஆயினும் “சைவம்” என்ற பெயர் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பது சிவகுரு ஆசிரியர் அவர்களின் நினைவுமீட்டலிலேயே. சிவகுரு அவர்களுக்கு முன்பும் அவரின் மறைவுக்குப் பின்பும் வேறெவரும் “சைவம்” என்ற பெயரினால் அழைக் கப்பட்டதில்லை.

அமரர் “சைவம்” சிவகுரு அவர்கள் அல்வாய் ஊருக்கு பெருமை தேடித்தந்த முதன்மையாளர்களுள் முக்கியமானவர். இவரது வாழ்க்கைச் சிறப்பை நாலூரும் அறியும். வையத் துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டி யவர் அவர். சைவம் என்பது அவரின் பெயருக்கான அடைமொழியன்று. அவருடைய பெயரே “சைவம்” என்று ஆனது. சைவ வாழ்வு இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்கு முன்னு தாரணமாக விளங்கியது அவர் வாழ்வு.

அமரர் சைவம் சிவகுரு அவர் கள் பிறந்து இன்று நூற்றுப்பத்து ஆண்டுகள் ஆகின்றன. அல்வாய்க் கிராமத்தில் சபாபதி கதிராசி தம்பதி யினருக்கு **15.06.1911** அன்று சிரேஷ்ட புதல்வனாகப் பிறந்தார். இவருக்கு மூன்று சகோதரர்களும் நான்கு சகோதரிகளும் இருந்தனர். சிறு வயதிலேயே கல்வியிலும், இறைபக்தி யிலும் ஆர்வமுள்ளவராக இவர் இருந்தபோதும், குடும்ப நிலைமை காரணமாக ஆறாம் வகுப்புடன் தனது கல்வியை இடைநிறுத்தி மூன்று வருடங்கள் தமது மைத்துனருடன் மேசன் வேலைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானார். அதன் பின் மீண்டும் கல்வியைத் தொடர்ந்து **1935** ஆம் ஆண்டு எஸ்.எஸ்.சி. பரீட்சையில் சித்தியடைந்து தான் கற்ற பாடசாலை யான தேவரையாளிச் சைவ வித்தியாசாலையிலேயே ஆசிரியரானார்; சேவையில் இருக்கும்போதே ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தார். மாணவர் நலனில் அக்கறையுள்ளவராக, அவர்களுக்கு சிறந்த கல்வி புகட்டிய வகையிலே அதிபர்களதும் வித்தியாபதியினரதும் நன்மதிப்புக்குரியவராகவும் சைவம் விளங்கினார். தேவரையாளிச் சைவ வித்தியாசாலையிலே ஓய்வு பெறும் வரை பணியாற்றி, சேவைக்காலத்திலேயே வெள்ளி விழாவும் கண்டார்.

அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் சைவம் நிறைந்த பங்களிப்பை செலுத்தியுள்ளார். இற்றைக்கு எண்பது ஆண்டுகளுக்கு முன் எமது ஆலயம் இருந்த நிலைமை வேறு. ஊரின் எல்லையிலே ஆலமரம் ஒன்றின் கீழ் அமைந்திருந்த அண்ணமார் ஆலயத்தின் ஒரு பக்கத்தே களிமண்ணினால் செய்யப்பட்ட பிள்ளையார் பொம்மையை வழிபாடு செய்யும் வழக்கம் இருந்தது. ஆனால் அண்ணமார் ஆலயம், அங்கு நடத்தப் பட்ட வேள்விக்காக அயலூர்களில் பிரசித்தி பெற்றிருந்தது. ஆண்டுக்கொரு முறை நடைபெறும் வேள்வியில் நூற்றுக்கணக்கான ஆடுகளும் கோழிகளும் பலியிடப்பட்டு வந்தன. பலரும் நேர்த்திக்காக ஆடுகளையும் கோழிகளையும் அண்ணமாருக்குப் பலியிடுவதற்கென கொண்டு வருவார்கள். ஆனால் சைவம் சிவகுரு அவர்களின் தந்தை வழிப் பூட்டனார் கதிரன் அவர்கள் “காத்தான்“ கோயில் ஒன்றை நிறுவி ஆதரித்து வந்ததனால் அவர் வழி வந்த பிள்ளைகளும் பேரர்களும் காத்தானையே தொடர்ந்து ஆதரித்து வந்தனர். காத்தான் கோயிலில் உயிர்ப்பலி நிகழ்ந்தில்லை. இதனால் கதிரன் வழி வந்த உறவுகள் உயிர்ப்பலி கொடுக்கும் அண்ணமார் கோயிலின் பக்கம் செல்லாதவர்களாகவும் காத்தானையே குலதெய்வமாக வழிபடும் வழக்கம் உடையவர்களாகவும் இருந்து வந்தனர். இவ்வகையில் கதிரன் அவர்களின் பிள்ளைகளான காத்தார், வேலன் (வேலுச்சோதிடர்) ஆகியோரும் இவர்கள் வழிவந்த கா.சபாபதி, கா.சுந்தரம், கா.கதிர்காமு மற்றும் வே.தம்பையா(தம்பையாச்சோதிடர்) ஆகியோரும் தமது பிள்ளைகளையும் அண்ணமார் கோயிலுக்குச் செல்லவிடாது தடுத்து வைத்திருந் தனர். ஆனால் சிறுவனாக இருந்த சிவகுரு அவர்கள் அண்ணமார் கோயிலின் பக்கத்தில் உள்ள விநாயகரை வழிபட்டு வந்ததோடு, அக்கோயிலுக்குப் பூசை செய்து வந்த ஆழ்வார் என்பவருக்கு பூசைக்கருமங்களில் உதவியாகவும் இருந்து வந்தார். இதனால் இவரது விளையாட்டுத் தோழனான வே.சீனிமுத்து அவர்கள் இவரை “சைவம்” என்று அழைக்கத் தொடங்கினார். இப்பெயருக்கேற்றவாறு சிவகுரு அவர்கள் வாழ்ந்து வந்தமையினால் சைவம் என்பதே அவரின் அடையாளம் ஆனது.

சைவம் சிவகுரு அவர்களின் இச்சிறுபராயகாலத்திலேதான் ஒரு நாளில் தவயோகி சிவயோகர் சுவாமிகள் அவர்கள் அண்ணமார் ஆலயத்தின் அயலி லுள்ள ஆலமரத்தின் கீழ் நிஷ்டையில் அமர்ந்தார். பின்பு நிட்டை கலைந்து அங்கு நின்றிருந்த சிவகுரு அவர்களை அருள்நோக்குச் செய்தார். அதே தினம் மாலையில் கொழும்புத்துறையில் சிவகுரு அவர்களின் தந்தை கா.சபாபதி அவர்களைக் கண்டு “உனது மகனை இன்று உனதூரிலுள்ள கோயிலிற் கண்டேன். அவன் பக்தனாகவும் குடும்பத்தில் பற்றுக் கொண்டனவனாகவும் ஆசார சீலனாகவும் திகழ்வான்” என்று கூறிச் சென்றார். அந்தக்கூற்று பொய்க்கவில்லை. தவயோகி யோகர் சுவாமிகளின் ஆசிப்படியே சைவம் சிவகுரு வாழ்ந்தார்.

சைவம் சிவகுரு அவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்த தேவரையாளிச் சைவ வித்தியாசாலை, அப்பாடசாலையின் நிறுவுனராகிய பெரியார் கா.சூரன் அவர்களின் வழிகாட்டலில் இயங்கி வந்ததோடு பிள்ளைகள் சைவ வாழ்வைப் பயிலும் ஒரு புனித இடமாகவும் விளங்கி வந்தது. இதனால் பிள்ளைகள் பலரும் பெரியார் சூரன் அவர்கள்மீது பற்றுக் கொண்டிருந்தனர். சூரன் அவர்கள்,

அந்நாளில் ஆலயங்களில் உயிர்ப்பலி கொடுப்பதை நிறுத்த வேண்டும் என்ற கொள்கையில் தீவிரமாக இருந்தார். அவர் வாழ்ந்த ஊரான வதிரியிலுள்ள அண்ணமார் ஆலயத்தில் இடம்பெற்றுவந்த உயிர்ப்பலிக் கொடுமையை நிறுத்துவதற்காக, தனி ஒருவராக நின்று எதிர்த்து, அதில் வெற்றியும் கண்டார். இவரின் மாணவர்களான கவிஞர் மு.செல்லையா, சைவப்புலவர் சி.வல்லிபுரம், ஆ.ம.செல்லத்துரை, சைவம் ச.சிவகுரு ஆகியோரும் சூரன் அவர்களின் கொள்கையைக் கடைப்பிடித்தனர். சிவகுரு அவர்கள் "பிறிலிம்" மாணவனாக இருந்த காலத்திலேயே "ஓர் ஆட்டின் பிரலாபம்" என்ற கட்டுரையை எழுதி அன்றைய "ஈழகேசரி" பத்திரிகையில் பிரசுரிக்கச் செய்து "உயிர்ப்பலிக் கொடுமை" பற்றிய விழிப்புணர்வை எங்கும் ஏற்படுத்தினார். அல்வாய் அண்ணமார் ஆலயத்திலும் உயிர்ப்பலியை நிறுத்த வேண்டும் என்ற எண்ணம் இவருள் முகிழ்த்தது.

அல்வாய் ஊரில்உள்ள அண்ணமார் ஆலயத்தையும் அருகே இருந்த பிள்ளையார் கோயிலையும் இணைத்து பரிபாலன சபை ஒன்றை அமைத்து அவற்றை பரிபாலனம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் 16.12.1943 அன்று. "அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிற் பரிபாலன சபை" நிறுவப்பட்டு, நிருவாகிகளும் தெரிவு செய்யப்பட்டமைக்கான பின்னணியில் இருந்தவர்களுள் சைவம் சிவகுரு அவர்களும் முக்கியமானவர். இச்சபையே பிள்ளையார் கோயிலின் முக்கிய நிகழ்வான திருவெம்பாப் பூஜையோடு, வருடாந்த அண்ணமார் வேள்வியையும் பொறுப்பேற்றுக் கொண்டது. 1948/49 காலப்பகுதிக்கான பரிபாலன சபையின் செயலாளராக சிவகுரு அவர்கள் இருந்த வேளையில், 1949 ஆம் ஆண்டில் "பாலகணபதி" விக்கிரகம் ஒன்றை அவர் உபகரித்ததனால் ஆலடிப்பிள்ளையார் கோயிலில் முதலாவது கும்பாபிஷேகம் 1949 ஆம் ஆண்டு வைகாசிப்பூசத்தினத்தன்று இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து, கும்பாபிஷேகம் இடம்பெற்ற கோயிலில் உயிர்பலி கொடுத்தல் இடம்பெறக்கூடாதென பரிபாலன சபை தீர்மானித்து, உயிர்ப்பலி கொடுக்கும் வேள்வி அண்ணமார் பொங்கலாக மாற்றப்பட்டது. சைவப் பூசகர் ஒருவர் நியமிக்கப்பட்டு, பூஜைகள் இடம்பெற்று வந்தவேளையில் இடைக் காலத்தில் (1954 இல்) பூசகர் நின்றுவிட, சைவம் சிவகுரு அவர்களே ஒன்றரை மாத காலத்திற்குப் பூசகர் ஆனார். பின்பும் ஒரு சமயம் ஒரு மாத காலத்திற்கு சிவகுரு அவர்கள் பூசகராக இருந்தார். எமது பாலகணபதியின் திருமேனியைத் தீண்டும் பேறு பெற்றவர் அவர் ஒருவரே. சைவம் சிவகுரு அவர்கள் தமது குல தெய்வமான காத்தான் கோயிலிலும் சிறிது காலம் பூசகர் ஆக இருந்தவர் ஆவார்.

சைவம் சிவகுரு அவர்களே அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார் கோயிலில் கூட்டுப் பிரார்த்தனையை ஆரம்பித்து வைத்தவரும் ஆவார். அப்பர் சுவாமிகளைப் போன்று சரியைத் தொண்டுகள் தினமும் செய்து 81 ஆவது வயதைப் பூர்த்தி செய்து இயற்கை எய்தினார். எமது ஆலயத்தில் இன்ன இன்னவெல்லாம் அமைய வேண்டும் எனக்கனவு கண்டுஅவற்றுள் பலவேலைகளை எமது ஊரவர்கள் செய்து முடிப்பதற்குத் தூண்டு கோலாகவும் இருந்து வந்தார்.

சைவம் சிவகுரு அவர்கள் ஆசிரியராக இருந்த காலத்தில் கணிதத்தையும் பொதுப்புத்தியையும்(பொதுவிவேகம்) கற்பிப்பதில் வல்லவராக விளங்கினார். இவரிடம் கற்ற மாணவர்கள் ஏனைய பாடங்களில் சித்திபெறத் தவறினாலும் கூட கணித பாடத்தில் சித்தி பெறத் தவறியதே இல்லை. அன்றைய நாளிலும் எஸ்.எஸ்.சி. பரீட்சைச் சித்திக்கு கணித பாடச் சித்தி கட்டாயமானதாக இருந்ததனால் இவரிடம் கற்ற மாணவர்கள் எஸ்.எஸ்.சி. பரீட்சையில் சித்திபெற்று அரச உத்தியோகங்களையும் பெற்றனர்.

சைவம் சிவகுரு அவர்கள் நீதிக்காகவும் நேர்மைக்காகவும் பாடுபடுபவர் என்ற நன்மதிப்பைப் பெற்றிருந்தமையினால் வடபகுதி மேல் நீதிமன்றத்தில் சிலகாலம் சில வழக்குகளுக்கு "யூரி" ஆகக் கடமையாற்றவும் அழைக்கப் பட்டிருந்தார். ஊரில் ஏற்பட்ட பிணக்குகளையும் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கும் அவர் முன் நின்றார். இறைபக்தி வழிநின்று சைவவாழ்வு வாழ்ந்த இவர் சமூகப் பற்றுள்ளவராகவும் விளங்கினார் அனைவருக்குமாகத் திறக்கப் படாத கோயில்களுக்குச் செல்வதே இல்லை என்பதிலும் உறுதியாக நின்றார். தீண்டத்தகாதவர் பார்க்கத்தக்கதாக போசனம் பண்ணக்கூடாது என்ற கருத்து "சைவ வினாவிடை" என்ற நாவலர் நூலில் வெளியான போது, அக்கருத்தை மறுதலித்தார். தேவரையாளிச் சைவ வித்தியாசாலையின் நிறுவுனர் பெரியார் கா.சூரன் அவர்களை முன்மாதிரியாகக்(Role model) கொண்ட சைவம் சிவகுரு அவர்கள், அவர் மீது கொண்ட அபிமானத்தால் "சூரன் ஆசாரியார் தர்மகர்த்தா சபை" என்ற சபையின் தோற்றத்திற்குக் காரணராக இருந்து சூரன் ஆசாரியார் குரு பூஜைத் தினத்தையும் கொண்டாட வழிவகுத்தார். அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோயிற் பரிபாலன சபையினர் சைவம் அவர்களுக்கு பவளவிழா எடுத்து மகிழ்ந்தனர்.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தின் ஆரம்ப காலத் தலைவர்களுள் ஒருவராக விளங்கிய சைவம் அவர்கள், அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்ட அணியில் புகழ்பெற்ற "டாஷ்" வீரனாகவும் திகழ்ந்தார். பல போட்டிகளின் போதும் முன்நின்று விளையாட்டு வீரர்களுக்கு உற்சாகம் ஊட்டி வந்தார். சனசமூக நிலையத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு அதன் வளர்ச்சி கண்டு இறும்பூதெய்தினார்.

கவிஞர் செல்லையா அவர்களின் சகோதரியான சின்னத்தங்கம் என்பவரை மணம் முடித்த சைவம் சிவகுரு அவர்கள் சிவமணி, கணேசலிங்கம் ஆகிய பிள்ளைச்செல்வங்களையும் கண்டு நிறைவான வாழ்வு வாழ்ந்தார். ஆலடிப்பிள்ளையார் கோயிலின் மூல விக்கிரகத்தை சைவம் அவர்கள் உபகரித்த காரணத்தினால், பரிபாலன சபையினருடன் இணைந்து சைவம் அவர்களின் பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் "மணவாளக் கோலத் திருவிழா"வைச் சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

அல்வாய்க் கிராமத்தின் ஆலய வளர்ச்சியிலும் சனசமூக நிலையத்தின் வளர்ச்சியிலும், ஊரவரின் கல்வி வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறை கொண்டு திசைகாட்டியாக விளங்கிய அமரர் சைவம் ச. சிவகுரு அவர்களை வரலாறு என்றும் பதிவு செய்து கொள்ளும்.

"நாங்கள்" பத்திரிகையானது
எம் அனைவரின்
பதிவாகவும் அமையப்
போகும் ஆவணப்பத்திரிகை.
அடுத்த இதழில் இருந்து அடிப்படை
விலையான
30/– இனைச் செலுத்தி பெற்றுக்
கொள்ளுங்கள்.
ஆண்டு சந்தா – 360/–
இது வியாபரத்துக்கானது அல்ல.
நம் அனைவரினதும் பதிவு.

# உழைப்பால் உயர்ந்த உத்தமர் அமரர் நா.சி.கந்தவனம்

■ ந.அரியநாயகம்



இலங்கைத் திருநாட்டின் மூளையாக விளங்குகின்ற யாழ்ப் பாணத்திலே வளம் கொழிக்கு வடமராட்சிப் பகுதியின் அல்வாய் கிராமம் ஆகும். இக்கிராமத்தில் தொழில் சார்ர்தியில் சிறுகக்கட்டி பெருவாழ்ந்தவர்கள் அதனடிப் படையில் அமரர் நா.சி.கந்தவனம் அவர்களுடைய வாழ்க்கை வர லாறும் தொகுக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

அல்வாய் தெற்கிலே மூன் றாம் பனையடி என்ற குறிச்சியிலே சின்னத்தம்பி கதிராசி தம்பதி களுக்கு நான்காவது மகனாக அவதரித்தார். தனது இளம் வயதுக் கல்வியை முடித்துக் கொண்டு தனது 16 வயதிலே அல்வாய் சுட்டியாவத்தை எனும் வளவிலே அல்வாய் முதல் பலசரக்கு கடை ஒன்றை மிகவும் சிறப்பாக நடாத்தி வந்தார். பின்பு தனது விடா முயற்சி யால் அல்வாய் மலையாள் அடைப்பு எனும் காணியை கொள் வனவு செய்து வீட்டையும் கடையையும் கட்டி அதன் அருகே வீரபத்திரர் ஆலயத்தையும் பிர திஸ்டை செய்தார். அது மட்டுமல்ல சிறுகக்கட்டி பெருக வாழ்ந்தவர் எனும் மகுட வாசகத்துக்கு ஏற்றால் போல் கடைக்கான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ஒற்றை திருக்கல் கூடார வண்டில், முன்பெட்டி பூட்டிய சைக்கிளில் நெல்லியடி சென்று கொள்வனவு செய்தமை அமரர் அவர் களுடைய உழைப்பிற்கு எடுத்துக்காட்டாகும். பிற்காலங்களில் மக்களின் தேவை அறிந்து பல கஷ்டப்பட்ட மக்களுக்காக A.D கடை (சங்கக்கடை) ஒன்றையும் ஆரம்பித்தார். பின்பு அதனை தனது முயற்சியாலே அல்வாய் தெற்கு (மனோகரா) கிளை 21B ஆரம்பித்து வெற்றியும் கண்டார். அதனால் எல்லா மக்களிடமிருந்து அன்பாக கடை கந்தவனம் என பெயர் பெற்றார்.

தனது வீரபத்திரர் ஆலயத்தில் கலையாடி கட்டுச் சொல்லி நோய்களை தீர்த்து வைக்கும் பண்பு அமரர் அவர்களிடம் காணப்பட்டது.

இவர் இளவயதில் இருந்து பொதுச்சேவையில் அதிக நாட்டம் உள்ளவர் தானும் தன் மனைவி மகேஸ்வரியும் சேர்ந்து அல்வாய் மனோகரா சன சமூக நிலையம் நிரந்தரக்கட்டிடம் அமைவதற்கு தனது காணியில் ஒரு பகுதியை அன்பளிப்பு செய்தார் விளையாட்டு பாரம்பரியம் கொண்ட அல்வாய் கிராமத்தில் சித்திரா பூரணை விளையாட்டுவிழா, போர் தேங்காய் உடைத்தல் போட்டிகளும் நடத்தி வந்தார். சித்திரா பூரணை விளை யாட்டினை ஆரம்பித்து வைத்தவர்களில் ஒருவராக அமரர் மிளிந்தார். அதுமட்டுமல்ல அவற்றிற்கான நிதி உதவிகளையும் செய்து வந்தார். அதனால் அல்வாய் மக்களால் சித்திரா பூரணை தோழன் எனும் பட்டம் சூட்டப்பட்டு அழைக்கப்பட்டு வந்தார்.

அத்துடன் இவர் ஓர் சிறப்பான சிற்பக்கலைஞர் என்றால் மிகை யாகாது வெல்டிங்வேலைகள் அறிமுகமாகாத கால கட்டங்களில் சீமெந்தில் கிறில் வடிவமைத்து பல வீடுகளை கட்டி மகிழ்ந்தார். குறிப்பாக அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய சபாமண்டப முகப்பிலே இவரது நண்பன் சிவக்கொழுந்து என்பவரின் உதவியுடன் செல்வவிநாயகர் திரு வுருவம் ஒன்றையும் திருவாசி ஒன்றையும் அமைத்து இன்றும் சபா மண்டத்தில் காட்சியளிப்பதோடு அவருடைய பெயரையும் எடுத்தியம்புகிறது.

அல்வாய் பகுதியிலே ந.இராசரத்தினம், மா.அழகானந்தன் செ.கனகசபாபதி போன்ற கலைஞர்களோடு கல்யாணப்பரிசு, பராசக்தி ஆகிய நாடகங்களில் பெண் பாத்திரம் ஏற்று நடித்து தனது கலையார்வத்தையும் நிருபித்துக் காட்டிய பெருந்தகையாளர் அமரர் நா.சி.கந்தவனம் அவர்கள்

சமூக மாற்றத்தினூடக படிப்படியாக உழைப்பால், கல்வியால், ஆன்மிக ஈடேற்றத்தால், விளையாட்டுத்துறையால், கலையால் உயர்ந்து அல்வாய் கிராமத்தில் கடைக்கந்தவனம் என்றும், சித்திரா பூராணை தோழன் என்று மக்களால் விழிக்கப்பட்ட அமரர் நா.சி.கந்தவனம் அவர்கள் அல்வாய் கிராமத்தின் வளர்ச்சியிலே தன்னுடைய உழைப்பால் சிறுகக்கட்டி பெருக வாழ்ந்தது மட்டுமல்லாமல் தான் சார்ந்த சமூகம் மீதான கலை, ஆன்மிகம், விளையாட்டு, தொழில்வாய்ப்பு என்று அனைத்திலும் தன் முத்திரையை பதித்துச் சென்றுள்ளார் என்பது நிதர்சனமான உண்மையாகும்.



அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் மாசி மாத சதுர்த்தி திரு சிவபாதம் குடும்பத்தினரால் சிறப்பாக மேற் கொள்ளப்பட்டது.



அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் ஆலய மாசி மாத பூசம் திரு ஜெகதீஸ்வரன் பிரகஸ்பதி குடும்பத்தினரால் சிறப்பாக மேற் கொள்ளப்பட்டது.

# முத்துமாரி வேடம் தரித்து மக்கள் மனதில் இடம் பிடித்த அல்வாய்க் கலைஞர் கந்தையா அரசரத்தினம்

க.பரணீதரன்



"அக்காளும் மாரி தங்காளுமாம்
ஆயிழைமார் அம்மனுக்கு ஏழுபேராம்"

தொலைக்காட்சியில் "ரூபவாஹினி சன"லில் காத்தவராயன் கூத்து நாடகம் போய்க் கொண்டிருக்கிறது. காத்தவராயன் கூத்து முத்துமாரி அம்மன் கண் முன்னே நிழலாடிச் செல்கின்றாள். பாடலின் உச்சரிப்பின் வல்லபமும், பாடலின் கனிவும், முத்துமாரியின் நடையழகும், முகபாவ அசைவுகளும் கவர்ந்து விட யார் இந்த முத்துமாரி என்று அப்பாவிடம் கேட்கின்றேன். "அரசரத்தினம் அத்தான்" என்ற பதில் கிடைக்கிறது. நம்ப முடியவில்லை மீண்டும் மீண்டும் உற்றுநோக்குகின்றேன்; ஆம் அவரே தான்... அவரது கண்கள் அதை வெளிப்படுத்தி விட்டன. பெண்ணிற்குரிய அத்தனை அங்க அசைவுகளுடனும் நளினங்களுடனும் நடித்துக் கொண்டிருந்தார் அரசரத்தினம் அவர்கள். பாத்திரப் பொருத்தம் மிக அருமையாக அமைந்துவிட தன் திறமைகளை கொஞ்சமும் குலைய விடாது வெளிப்படுத்தி கொண்டிருந்தார் அரசரத்தினம் அவர்கள். அவரைக் காணுகின்ற சமயங்களில் முத்துமாரியின் தோற்றமே என் கண் முன்னே விரியும்.

கந்தையா அரசரத்தினம் அவர்கள் **10.01.1945** இல் கணபதிப்பிள்ளை கந்தையா அவர்களுக்கும் கந்தையா நாகமுத்து அவர்களுக்கும் மகனாக அல்வாயில் பிறந்தார். இவரது பெற்றோர் மிகுந்த சிரத்தையுடன் இவரை வளர்த்து வந்தார்கள். சிறு வயது முதலே கல்வியிலும், விளையாட்டுகளிலும், கலைகளிலும் ஆர்வமுடையவராக இவர் விளங்கி வந்தார். **1950** ஆம்ஆண்டு தேவரையாளி இந்துக் கல்லூரியில் இவரது பாடசாலை வாழ்க்கை ஆரம்பித்தது. திரு சி.வல்லிபுரம், திரு ச.சிவகுரு, திரு ஆ.ம.செல்லத்துரை, அதிபர் திரு சீனித்தம்பி, திரு கந்தையா, திரு மகாலிங்கம், திரு திரவியம், திரு அமிர்தலிங்கம் போன்ற எமது சமூகத்தின் தலைசிறந்த ஆசிரியர்களிடம் கல்வியும் கலையும் பெற்றுக்கொள்ளக்கூடிய பேறு இவருக்கு கிடைத்தது. பாடசாலைக்காலத்தில் மெய்வல்லுநர் போட்டிகளில் அனைத்து விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கினார். குறிப்பாக ஓட்டப்போட்டியில் மிக வேகமாக ஓடி பல சாதனைகளை பாடசாலையில் நிலைநாட்டியுள்ளார். அத்துடன் கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற விளையாட்டுகளிலும் மனோகரா அணிக்காக விளையாடி சிறப்பித்துள்ளார்.

பாடசாலைக்காலத்திலேயே இவரது குரல் வளச் சிறப்புக் காரணமாக இவர் பல நாடகங்களில் நடித்துள்ளார். இவருடைய நாடகப் பயணம் ம.கணேசலிங்கம் அவர்களுடன் ஆரம்பித்தது. பின்னர் செ.விவேகானந்தன் அவர்களுடன் காத்தவராயன் கூத்து நாடகத்தில் முத்துமாரியாகவும், அரிச்சந்திரா மயானகாண்டத்தில் சந்திரமதியாகவும், தேவரையாளி யோகராஜாவின் "தூய உள்ளம்" (சமூக) நாடகத்தில் "தாய்" பாத்திரமேற்று நடித்து பெருமையும் பாராட்டும் பெற்றுக் கொண்டார். பெண்ணாக நடிக்க பலர் பின்நிற்கின்ற வேளையில் மிக விருப்புடன் பெண் பாத்திரங்களை ஏற்று பாத்திரத்திற்கு ஏற்றாற்போல தன் திறமைகளை வெளிப்படுத்தி இரசிகர்களின் உள்ளத்தில் நீங்காது இடம் பிடித்துக் கொண்டார்.

பாடசாலைக்காலத்தில் கவிஞர் மு. செல்லையா அவர்களால் அண்ணாவியம் செய்யப்பட்டு குரும்பசிட்டியில் மேடையேற்றபப்பட்ட நாடகத்திலும் நடித்து பாராட்டுப் பெற்றார்.

நம் நாட்டு கலைஞர்கள் பலர் தொடர்ந்து கலைகளில் ஈடுபட முடியாமல் போனதற்கு குடும்பப் பொறுப்பும் காரணமாக அமைந்தது. அரசரத்தினம் அவர்களுக்கு தபாலகத்தில் உத்தியோகம் கிடைத்த போதும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை சேர்ந்தவர் என்ற வகையில் அவருக்குரிய உத்தியோகம் கொடுக்கப்படாமல் அநீதி இழைக்கப்பட்டது. இதன் காரணமாக மனம் உடைந்து போகாமல் இராசரத்தினம், மேசன் மயிலு ஆகியோருடன் மேசன் வேலைக்கு சென்றார். வேலைத்திருப்தி இல்லாத காரணத்தால் பிற்காலத்தில் சீவல் தொழில் செய்து வந்தார். அளம்பில் போன்ற இடங்களில் கூட இவர் தொழில் செய்து வந்துள்ளார். காலத்துக்கேற்ற வகையில் மற்றவரிடம் கையேந்தாமல் தன் குடும்ப பாரத்தை சுமக்கும் வகையில் பல்வேறு தொழில்களைப் புரிந்து வந்துள்ளார். உதாரணமாக இடப்பெயர்வு காலத்தில் கரைவலையில் மீன் பிடித்து விற்றுக் கூட சோராது தன் குடும்பத்திற்காக உழைத்துள்ளார். இத்தொழில் பிரச்சினையே இவரை தொடர்ந்து நாடக ஆற்றுகைகளில் ஈடுபட தடையாக அமைந்தது. இருப்பினும் இடையிடையே சில நாடகங்களில் நடித்து வந்தார். வசந்தாதேவி அவர்களை தன் மனையாளாக இணைத்துக் கொண்டு நல்மகவுகளைப் பெற்றுக் கொண்டார்.

தேவாரங்களை பக்தியுடன் பாடக் கூடிய வல்லமையும், நாடகங்களை கலைஞனாக நின்று ரசிக்கக் கூடிய தன்மையுடையவராகவும் விளங்கி வந்த இவரை சுவிஸ் நாட்டிற்கு சென்ற சமயம் உறவுகளும், உலகத்தமிழர் பேரவையும் இணைந்து இவரது கலைச்சேவையைப் பாராட்டி கௌரவித்து மகிழ்ந்தார்கள். நல்லதொரு கலைஞனாக விளங்கி பிற்காலத்தில் இவரது பிள்ளைகளின் சமூக சேவைகளுக்கு, கோயில் திருப்பணிகளுக்கு உறுதுணையாக நின்று வழிகாட்டியாக விளங்கினார். அல்வாய் கலைப்பாரம்பரியத்தில் கந்தையா அரசரத்தினம் அவர்களது ஆற்றல்கள் என்றும் போற்றப்படத்தக்கன. கலைஞர்கள் மரணிப்பதில்லை அவர்கள் இரசிகர்கள் மனதில் வாழ்ந்து கொண்டு இருப்பார்கள். அந்த வகையில் க.அரசரத்தினம் அவர்கள் என்றும் எம்மவர்கள் உள்ளத்தில் இருப்பார்.

# பல்துறை விளையாட்டு வீரன் அமரர் கனகசபாபதி சத்தியநேசன்

வெற்றி துஷ்யந்தன்



சத்தியநேசன்! அல்வாய் மனோகரா பிரதேசத்தையோ அல்லது அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகத்தை பொறுத்த வரையிலோ என்றைக்கும் தவிர்க்கப் பட முடியாத ஒரு நாமம். கல்வியற் துறைசார்ந்தவர்கள், உத்தியோகஸ்தர்கள், விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள் என்ற வகையறாக் களில் யாரையும் விட்டுவிட முடியாத பிரதேசச் செல்வாக்கு எங்கள் கிராாமத்திற்குரியது. வீட்டுக்கு வீடு எல்லா துறைசார்ந்தவர்களும் நிறைந்து போயிருக்கின்ற சிறப்பும் எங்கள் கிராமத்திற்குரியது. அப்படியான துறைசார்ந்தவர்களில் விளையாட்டு அடையாளமாய் எங்கள் கிராமத்தில் தான் வாழ்ந்த சொற்ப வருடங்களில் பலவற்றை சாதித்தவர் அமரர் சத்தியநேசன் இருபத்தேழு வருடங்கள் மாத்திரம் வாழ்ந்த சத்தியநேசன் எமது கழகம் சார்ந்து சிறுவயது முதலே பல விளையாட்டுக்களில் கலந்து கொள்பவர்.

சிறுவயது முதலாக எங்கள் கிராமிய விளையாட்டுக்களில் அன்றாடம் ஈடுபடுகின்ற ஒருவராக இருந்த சத்தியநேசன் அவர்கள் கிட்டிப்புல் விளையாட்டிலும், போளை அடித்தலிலும் மிகச்சிறந்த விற்பன்னராக இருந்துள்ளார். என்பதை அவரது வயதோடொத்த நண்பர்கள் சொல்ல கேள்விப்பட்டிருக்கின்றேன். எமது ஆலய ஆல மரத்தின் கீழ் அன்றைய நாட்களில் இளையோரால் விளையாடப்படுகின்ற குண்டுப்பந்து விளையாட்டிலும் மிகவும் திறமைசாலியாக மிக நீண்டதூரத்திற்கு பந்தை அடிக்கக்கூடிய ஒருவராகவும் அவர் இருந்திருக்கின்றார். அந்நாளில் பிரபலமாக இருந்த வொலிசொக்கர், பட்மின்ரன் போன்ற விளையாட்டுக்களையும் ஸ்டைலிஷ் ஆக விளையாடுகின்ற ஒருவராக சத்தியநேசன் இருந்திருக்கின்றார்.

சிறந்ததொரு துடுப்பாட்ட வீரனாக திகழ்ந்த சத்தியநேசன் அவர்கள் எமது கழகத்திற்கும் அரியாலை ஸ்ரீ கலைமகள் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் இடம்பெறுகின்ற வருடாந்த நட்புறவு போட்டித் தொடரிலும் மிகச்சிறிய வயதில் விளையாடியிருக்கக் கூடிய ஒரு சிறந்த வீரராக திகழ்ந்திருக்கின்றார். எங்கள் சந்ததிகள் பலரதினதும் பாதச்சுவடுகளை தன்னில் பதிய வைத்த நொச்சியடி வெட்டையிலும், எமது கழக மைதானத்திலும் இடம் பெறுகின்ற Big Match பலவற்றிலும் விளையாடியும், அவற்றை ஏற்பாடு செய்கின்ற ஒருவராகவும் சத்தியநேசன் இருந்திருக்கின்றார். ஆரம்ப துடுப்பாட்ட வீரராகவும், மிக அழகாக பந்தை விக்கெட் நோக்கி குறிவைக்கும் அவரது ஸ்டைலிஷ் பந்து வீச்சை பார்த்த ஞாபகத்திலும் சொல்கிறேன் மிக நேர்த்தியான அழகியல் சார் துடுப்பாட்ட விளையாட்டு வீரன் இவராவார்.

உதைபந்தாட்டத்தை பொறுத்தவரை எமது கழகத்திற்கென்றொரு பாரம்பரியமும், சிறப்பும் உண்டு. அந்த வகையில் உதைபந்தாட்டத்திலும் தனது காத்திரமான நுணுக்க ஆட்டம் மூலம் பல வெற்றிகளுக்கு காரணமாக சத்தியநேசன் இருந்துள்ளார். மத்திய முன்களவீரராக களமிறங்கும் அவரது ஆட்டம் அன்றைய நாளில் பல ரசிகர்களாலும் விரும்பப்பட்டு அவருக்கென்று ஒரு ரசிக கூட்டத்தையும் உருவாக்கியது. ஒரு சமயத்தில் D.M வேதாபரணம் அவர்களைநேர்காணல் செய்த போது மனோகரா கழக என்ற விடயப்பரப்பில் சொல்லும் போது தான் பெரிதும் பார்த்து ரசிக்கின்ற வீரராக சத்தியநேசன் இருந்தார் என்பதை நெகிழ்ச்சியோடு பதிவு செய்தமையையும் இங்கு குறிப்பிடுகின்றேன். இவருடைய பங்களிப்போடு இடம்பெற்ற நவசக்தி சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியை அவ்வளவு சுலபத்தில் யாரும் மறந்துவிட முடியாது.

இப்படி பல போட்டிகளில் அவரது சிறப்புறு ஆட்டம் எமது கழக அணிக்கு பக்கபலமாக அமைந்தது. இன்றும் கூட அனைவருக்கும் நினைவிருக்கும் எமது கழக உதைபந்தாட்ட சீருடையான சிவப்பு மஞ்சள் கோடு சீருடை உண்மையில் எமது கழகத்தின் பொற்கால சீருடைகளில் ஒன்று. வெள்ளை நிற சோட்ஸ்சும் அந்த சீருடையும் சத்தியநேசனுக்கென்று ஒரு வித்தியாசமான அழகைக் கொடுத்தன. அந்த அரிய புகைப்படங்கள் இன்றும் அவரது சமகாலத்தவர் சி.கௌசிகனுடைய சேகரிப்பில் பாதுகாக்கப்பட்டு அண்மிய நாட்களில் முகநூலிலும் பதியப்பட்டது.

சிறுவயதிலேயே வைத்தியசாலை ஊழியராக பணியாற்றி அரச சேவையாளனாயும் அங்கம் வகித்தவர் சத்தியநேசன் அவர்கள். இறுதிக் காலத்தில் எமது கிராமத்தில் 1997 என நினைக்கின்றேன், சித்திரை வருடப் பிறப்பு மரதன் ஓட்டப்போட்டியில் சத்தியநேசன் அவர்கள் பத்மலிங்கன் அவர்களோடு இணைந்து பங்கு பற்றி ஓடிய அந்த காட்சிகள் இப்போதும் கண்களுக்குள் காட்சிகளாய் விரிகிறது. அனைத்து செல்வ வளங்களையும் கண்டு வாழ்ந்து கொண்டிருந்த போது தான் அவரின் மறைவு எங்கள் கிராமத்தில் பேரிடியாய் வீழ்ந்தது.

மனோகரா விளையாட்டுக்கழக வரலாற்றில் அனைத்து விளையாட்டுக்களினூடாகவும் அணிக்கான விளையாடி கழக வெற்றிகள் பலதிலும் தன் பங்களிப்பை வழங்கி வெற்றிக்காக உழைத்த ஒரு மகத்தான வீரனாக சத்தியநேசன் நித்தியம் வாழ்வார் என்பது நிதர்சனம்.

# எமது ஊரின் வெட்டுக்கிணறு இயவராந்தோட்டம் பற்றிய வாய்மொழி வரலாறு

வாய்மொழி வரலாறு:
திருமதி இரத்தினம் செல்லக்குட்டி (வயது 93)

தொன்னூற்று இரண்டு வயது கடந்தும் மிக ஆராக்கிய மாக வாழும் அம்மா, எனது அனைத்துச் செயற்பாடுகளுக்கும் உந்து சக்தியாக இருந்து வருகிறார். நான் ஓய்வு நேரங்களை அம்மாவுடன் சென்று உரையாடி மகிழ்வேன். அவ்வாறு உரையாடும் வேளைகளில் நல்ல பல தகவல்களை என்னுடன் பகிர்ந்து கொள்வார். காலப்போக்கில் அவற்றை அடுத்த தலைமுறைக்கு கையளிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்க அச் செயற்பாடுகளில் இறங்கினேன். இங்கே நான் பதிவு செய்துள்ள விடயமும் எனது தாயாரிடம் இருந்து வாய்வழி மூலம் பெறப்பட்ட தகவல் ஆகும். - செல்லக்குட்டி கணேசன்



எமது கிராமம் (அல்வாய் மனோகரா) கடல் மட்டத்தில் இருந்து ஏறக்குறைய இருநூறு அடி உயரத்தில் உள்ள ஒரு மேட்டு நிலப் பரப்பாகும். இந்நிலப்பரப்பில் குடி யேறிய அல்லது குறியேற்றப்பட்ட எமது முன்னோர்கள் தமது நீர்த் (தண்ணீர்) தேவைகளுக்காக மிகவும் சிரமப்பட்டுள்ளனர். அவ்வேளையில் தமமது நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய அல்வாய் மேற்கு பூமாஞ் சோலைக் குறிச்சியில் உள்ள வெட்டுக் கிணற்றைப் பயன்படுத்தினர். அக்கிணறு ஆனது கிட்டத் தட்ட நாற்பது நாற்பத்தைந்து அடி ஆழம் கொண்டது. அக்கிணற்றில் இருந்து நீரை வெளியே எடுக்க “துலா” முறையைப் பயன்படுத்தினர். பிற்காலத்தில் “கப்பி” முறையைப் பயன்படுத்தினர்.

இவ்வாறு எமது மக்கள் நீருக்கு பட்ட கஸ்ரங்களை அவதானித்த பணவசதியும், நிலவசதியும் கொண்ட ஒரு குழுமத்தினர் எமது கிராமத்தில் ஒரு கிணறு வெட்ட முயற்சித்து அதில் வெற்றியும் கண்டனர். அக்கிணறு தான் இயவராந்தோட்டம் ((குயவராந்தோட்டம்) குறிச்சியில் அமைந்துள்ள வெட்டுக்கிணறு ஆகும். இக்குறிச்சியில் ஆரம்ப காலத்தில் குயவர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்தார்கள் என்றும் அவர்கள் அவ்விடத்தில் இருந்து தமது தொழிலை (பானை, சட்டி, முட்டி வனைதல்) மேற்கொண்டார்கள் என்றும் அதனால் அக்குறிச்சிக்கு குயவராந்தோட்டம் என்ற பெயர் வந்ததாகவும் காலப்போக்கில் அப்பெயர் இயவராந்தோட்டம் என மருவியதாகவும் சொல்லப்படுகிறது.

இக் கிணறு ஆனது இயவராந்தோட்டம் என்ற குறிச்சியில் அமைந்திருந்தாலும் அதனை எமது மக்கள் கொக்கட்டியாவளவு கிணறு என்றே அழைத்து வருகின்றனர்.

எமது கிராமத்தில் இதன் பின்னர் பல வெட்டுக்கிணறுகள் வெட்டப்பட்டாலும் அவை எல்லாவற்றையும் விட ஆழம் குறைந்த கிணறு இக்கிணறு ஆகும். இக் கிணறு ஆனது முருகைக்கல், பனங்கிழங்கு தோல் (தோகை) மற்றும் முருகைக்கல், கடற்சிப்பி, சோகி என்பவற்றில் இருந்து தயாரிக்கப்பட்ட சுண்ணாம்பு ஆகியவற்றைப் பயன் படுத்தியே கட்டப்பட்டதாகும்.

கிட்டத்தட்ட நூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன் வெட்டப்பட்ட இக் கிணறு ஆனது நீர் (தண்ணீர்) கண்ட போது பிறந்தவர் தான் அல்வாய் மனோகரா மயிலிட்டியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி பணிப்பாளர் த.தபேந்திரராசா (ஆத்தங்கரை) அவர்களின் தந்தை வழிப் பேரன் முத்து ஆவார்.

அக் கிணறு நீர் கண்ட நாளில் பிறந்ததனால் பெற்றோர் முத்து எனப் பெயரிட்டு மகிழ்ந்தனர். இவ்வாறு பல தகவல்களை எனது தாயாரிடம் இருந்து பெற்றுள்ளேன்.

எனக்குரிய வருத்தம் என்னவெனில் பல சிரமங்களுக்கு மத்தியில் வெட்டப்பட்ட இக் கிணறு தற்போது குப்பை கூளங்களாலும் ஏனைய கழிவுப் பொருட்களாலும் தூர்க்கப்பட்டு வருவதாகும். இதனை தடுத்து நிறுத்தி இச் செயற்பாட்டின் குடும்ப வாரிசுகள் உரிய முறையில் பராமரித்து எமது சந்ததிக்கு அதன் பெறுமானத்தை எடுத்துச் செல்ல வேண்டும். அல்லது எமது சமூக நிறுவனங்கள் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

ஒரு காலத்தில் எமது அல்வாய் சமாணந்தறை ஆலடிப் பிள்ளையார் தீர்த்தக் கிணறும் இதுவாகும். இங்கே தான் தீர்த்தமாடி ஊர்வலமாக தனது இருப்பிடத்திற்கு செல்வார் ஆலடி விநாயகர்.

**அஞ்சலி**

**அமரர் கதிரவேலு கமலேஸ்வரன்**

**(10.11.1958-17.02.2021)**



அமரர் கதிரவேலு கமலேஸ்வரன் அவர்களின் இழப்பு எல்லோருக்குந் துன்பந்தரும் நிகழ்வாக இருக்கின்றது என்பது மட்டுமல்லாமல் அல்வாய் மற்றும் வதிரி கிராம மக்களுக்குப் பெரும் பின்னடைவையும் தந்துள்ளது.

அமரர்களான கதிரவேல் தவமணி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனான கமலேஸ்வரன் துன்னாலையை பிறப்பிடமாகவும் அல்வாய், துன்னாலையை வளர்விட மாகவும் கொண்டு திருமணத்தின் பின்னர் வதிரியில் வாழ்ந்து வந்தவர். இவர் தற்றுணிபுக்கும் விடா முயற்சிக்கும் முன்னுதாரணமானவர். ஆரம்ப மற்றும் முன் இடைநிலைக் கல்வியை கரவெட்டி ஞானா சாரியார் கல்லூரி, அல்வாயூர் ஸ்ரீலங்கா வித்தியாசாலை மற்றும் தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பயின்று க.பொ.த உயர்தரத்தினை புலோலி வேலாயுதம் மத்திய கல்லூரியில் வணிகத்துறையிலும் கற்றார். வணிகத் துறையில் இவர் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாக வணிகமாணிப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.

ஆரம்பத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தி யோகத்தராக பதவியில் சேர்ந்துகொண்ட கமலேஸ்வரன் தமது சுயமுயற்சியுடன்கூடிய வழிகாட்டலினால் இலங்கைக் கணக்கியலாளர் சேவையில் (Sri Lanka Accountant Service) இணைந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றார். அந்தப் பதவியில் இருக்கின்ற காலங்களில் கொழும்பு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சிறப்பான வேவையை வழங்கினார் யாழ் போதனா வைத்திய சாலையில் கணக்காளராக இருந்த காலத்தில் இவருடைய நிதிமுகாமைத்துவம் வைத்திய சாலை முகாமைத்துவத்தினால் பெரிதும் பாராட்டப் பட்டுள்ளது. அத்துடன் கணக்கியலாளர் சேவையில் சேர்ந்துகொள்ளும் உத்தியோகத்தர்களுக்கான வளவாள ராகவும் கணக்கியலாளரைத் தேர்வுசெய்யும் பரீட்சகராக வும் செயற்பட்டவர்.

அமரர் கமலேஸ்வரன் அவர்கள் கணக்கியல் துறைக்கு அப்பால் கல்வி மற்றும் சமூக சேவைகளிலும் ஈடுபாடுடையவர். எமது கிராமங்களிலுள்ள இளைஞர்கள், யுவதிகளின் கல்வி மேம்பாட்டில் அக்கறை கொண்டிருந் தார். முக்கியமாக இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல்களை வழங்கு வதற்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்டவர். நண்பர்கள் வட்டம் என்ற அமைப்பை பல நண்பர்களுடன் இணைந்து உருவாக்கி அதன் வாயிலாக ஒழுங்குசெய்து, பொருத்தமான வளவாளர்களை வரவழைத்துக் கருத் தரங்குகளை சிறப்பாக வழிநடத்தியவர். எமது கிராமங் களில் உள்ள இளைஞர்கள் க.பொ.த உயர்தரம் மற்றும் பட்டப்படிப்பை முடித்தபின்னர் ஏதாவது தொழி லொன்றைப் பெற்றுக்கொள்வதோடு திருப்பியடைந்து விடுவது வழக்கம். அதற்கு அப்பாலுள்ள வாய்ப்புகளைத் தேடியறிந்து முன்னேற்றங் காண்பதற்கு அவர்கள் முயற்சிப் பதில்லை. அதனைக் கருத்திற்கொண்டு 2020இல் திருவாளர்கள் மா. கருணாநிதி, த. யோகலிங்கம் ஆகி யோருடன் இணைந்து அமரர் கமலேஸ்வரனும் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் ஒரு கலந்துரையாடலை ஒழுங்குசெய்தோம். இதன்பொருட்டு எமது கிராமங்களிலுள்ள இளைஞர்களுக்கும் யுவதி களுக்கும் அழைப்பு விடுத்தோம். இலங்கை நிருவாக சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை, இலங்கைக் கல்விச் சேவை மற்றும் க.பொ.த உயர்தரத்துடன் தொழிலைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் தொடர்பாக அந்தந்தத் துறைகளில் தேர்ச்சியும் அனுபவமும் உள்ள பல வளவாளர் களை அழைப்பதற்கான ஒழுங்குகளை கமலேஸ்வரன் அவர்கள் மேற்கொண்டார். ஆயினும் கருத்தரங்கில் பங்கு கொண்டவர்கள் தொகை விரல்விட்டு எண்ணக்கூடியதாக இருந்தமை கவலை தந்தது. இது போன்ற பல நிகழ்வுகளை நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தும் இளைஞர்கள் காட்டிய பிரதிபலிப்பின் குறைபாடு காரணமாக அவற்றைச் செயற்படுத்த முடியாமல் போனமை வருத்தத்திற்குரியது

1970 களில் அமரர் கமலேஸ்வரன் அவர்கள் மனோகரா சனசமூக நிலையத்தின் செயலாளராகப் பணி யாற்றியதுடன் இதே காலப்பகுதியில் எமது ஊரிலிருந்து வெளியிடப்பட்ட “கார்மேகம்” என்னும் கையெழுத்துச் சஞ்சிகையின் இணையாசிரியர்களுள் ஒருவராகவும் செயற் பட்டவர். இதற்குமப்பால் வெளியுலகில் நன்கு அறியப் பட்ட ஒருவருங்கூட. மன்னாரில் சேவையாற்றிய காலத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் கௌரவ நிதிச் செயலாளராகவும் தொண்டாற்றியுள்ளார்.

அமரர் அவர்களின் சமூகம் சார்ந்த சிந்தனை களுக்கும் சேவைகளுக்கும் லயன்ஸ் கழகம் உன்னதமான களமாக அமைந்தது. இலங்கையின் சர்வதேச மாவட்ட மான 306 - B1 இன் கிளையாக உள்ள வடமராட்சி லயன்ஸ் கழகத்தில் நிருவாக உறுப்பினராக இருந்த அவர் ஏனைய கழகங்களால் நன்கு அறியப்பட்ட ஒருவர். இந்தக் கழகத்தி னூடாக பாடசாலைகளுக்கான கற்றல் உபகரணங்கள், தேவையுடைய மாணவர்களுக்கான மேலதிக உதவிகள் ஆகியவற்றைச் செய்தார். மேலும், கடந்த வருடம் விசேட மாக முன்னெடுக்கப்பட்ட மரநடுகைச் செயற்றிட்டத்தை விருப்போடு முன்னெடுத்து வடமராட்சியின் பல பகுதி களிலும் நடைமுறைப்படுத்தினார். வடமராட்சி மக்களின் பொதுச் சுகாதார நலன்களில் அக்கறைகொண்டு பருத்தித் துறை ஆதார வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங் களை வழங்குவதற்கும் லயன்ஸ் கழகத்தாரோடு இணைந்து செயற்பட்டார்.

நேற்று இருந்தவர் இன்று இல்லை எனக் கூறுவதையே இந்த உலகு பெருமையாகக் கொண்டுள்ளது. ஆயினும், இதுவோர் உலக நியதி. இந்த நியதியிலிருந்து எவரும் விடுபடவும் முடியாது என்ற தேற்றத்துடன் அமரர் கமலேஸ்வரன் அவர்களுடைய ஆன்ம சாந்தி குறித்து நாம் எல்லோரும் ஆலடி விநாயகனைப் பிரார்த்திப்போ மாக.

**–பேராசிரியர் மா. கருணாநிதி**



## அஞ்சலி
## சுந்தரலிங்கம் நிருத்திகன்
## (19.07.1987 - 07.02.2021)

அல்வாய் - மனோகராக் கிராமத்தில் 1987.7.19 அன்று சுந்தரலிங்கம், சிவமலர் தம்பதிகளுக்கு தலைப் பிள்ளையாக கவிஞர் சு. நிருத்திகன் பிறந்தார். சிறு வயது முதலே அவரது கிராமத்தின் வாசம் காரணமாக கல்வி, கலை, விளையாட்டு, ஆன்மிகம் என்பவற்றில் மிகுந்த ஈடுபாடு உடையவராக நிருத்திகன் காணப் பட்டார். மனோகரா முன்பள்ளியில் தனது கல்வியை ஆரம்பித்து ஆரம்ப கல்வியை வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர்கல்வியை யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் பெற்றுக் கொண்டார். பாடசாலைக் காலத்தில் அதிபர், ஆசிரியர்களது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய மாணவ னாக விளங்கியதோடு பாடசாலையில் நடைபெறு கின்ற கலை இலக்கிய போட்டிகள், விளையாட்டு, ஆன்மிக நிகழ்வுகள், பட்டி மன்றங்கள் என்பவற்றில் முன்னின்று பங்குபற்றி பலரது பாராட்டையும் பரிசு களையும் பெற்றுக் கொண்டார். உயர்தரத்தில் கலைப்பிரிவில் கற்று உயர் சித்தி பெற்று யாழ் பல்கலைக்கழகம் சென்று அங்கு “திட்டமிடல்” பாடத்தை தெரிவு செய்து துறைபோகக் கற்று தன்னை வளப்படுத்திக் கொண்ட நிருத்திகன் அவர்கள், கல்வியே இடுக்கண் களைய சரியான பாதை என்பதை உணர்ந்தவராக தனது கற்றல் செயற்பாடுகளை மேற் கொண்டு வெற்றி கண்டதோடு தன்னோடு சேர்ந்த பலரையும் கல்வியில் உயர்ச்சி பெறவும், கல்வியை நாட்ட முடன் கற்கவும் வழி சமைத்தார். அல்வாய் கிராமத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டவராக பல்வேறு சமூக பணிகளை முன்னின்று செயற்படுத்தியதோடு அல்வாய் கிராமத்தின் மனோகரா சனசமூக நிலையம், இந்து இளைஞர் மன்றம், முன்பள்ளி பழைய மாணவர் சங்கம், அறநெறிபாடசாலை என்பவற்றில் முக்கிய பதவிகளை வகித்து பல அபிவிருத்திப் பணிகளை செய்து ஊரின் எழுச்சிக்காக பாடுபட்டு உழைத்தார். தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்து தர்மாசிரியராகவும் விளங் கினார். அத்துடன் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், கரப் பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் விற்பன்னராக திகழ்ந்தார். கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் பின்னர் புலனாய்வு உத்தியோகத்தராக உயர்வு கண்டார். பின்னர் மருதங்கேணி பிரதேச செயலகத்தில் கைத் தொழில் அமைச்சின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றினார். பண்டத்தரிப்பை சேர்ந்த ஜெஸ்லின் சுரேஜினி அவர்களை காதலித்து திருமணம் முடித்து கொண்ட இவர், இடர்படுகின்ற, வறுமைப்பட்ட மக்களின் வாழ்வுக்காய் தன்னை அர்ப் பணித்து சமூக சேவை புரிந்து வந்தார். அன்னாரின் திடீர் மறைவு எமது ஊரவர்கள் அனைவருக்கும் பேரிழப்பாகும். சிறந்ததொரு சமூக சிற்பியாக வாழ்ந்த அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

**பரணீ**

---



## அஞ்சலி
## மயிலு வேல்மணி
## (20.11.1955-19.02.2021)

அல்வாய்க் கிராமத்தை பிறப்பிடாகவும் அல்வாய் வடக்கு கிராமத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர் மயிலு வேல்மணி அவர்கள் உண்மையிலே அவர் வாழ்ந்து கொண்டிருப்பது தெரியாமலேயே தனது இறுதிக் காலம் வரை உறுதியான ஒரு வாழ்வியலை வாழ்ந்தவர். பிரபல்யமான கட்டக்கலைஞராக மிக நீண்ட காலம் வலம் வந்தவர். இவர் மயிலு தங்கம்மா தம்பதியினருக்கு மகனாக 19ஒஒ.ஒஒ.ஒஒ அன்று பிறந்தார். இவர் இறுதிக்காலம் வரை உழைத்து வாழ வேண்டும் என்ற சிந்தனைக்கு இசைவாக உறுதியோடு வாழ்ந்தவர் இறுதி நாளில் அந்த வேலைத்தளத்திலேயே கண்மூடியமை அவர் தன் பணியை எவ்வளவிற்கு நேசித்தார் என்பதை அறிய மற்றுமொரு சாட்சியம் எனலாம்.

எமது மனோகரா உதைபந்தாட்ட அணி யின் தீவிர ஆதரவாளராக காணப்பட்டார். எமது கிராமங்களில் இடம் பெற்று வந்த உதைபந்தாட்ட தொடர்களில் எமது அணியின் போட்டிகளை காண்பதற்கு மைதானத்தில் பிரசன்னமாயிருப் பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். தான் மணம் புகுந்த கிராமத்திலும் அத்தனை பங்களிப்புக்களை யும் வழங்கி வந்தவர். எமது ஆலயத்தின் ஐந்தாம் திருவிழா உபயகாரர்களில் ஒருவராகவும், கந்தசஸ்டி பூஜையின் முதலாம் நாளின் உபயகாரர்களில் இவரும் ஒருவர்.

குடும்ப வாழ்வியலில் தனது இரண்டு பிள்ளைகளையும் நல்லதொரு இடத்தில் அரச உத்தியோகத்தர்களாக்கி மகிழ்ந்தவர். குறிப்பாக இவரது மூத்த மகன் வே.தர்சன் அவர்கள் எமது கிராமத்தின் அத்தனை செயற்பாடுகளிலும் முன்னிற்கின்ற ஒருவர்.


இப்படியாக ஒரு நிறைவான வாழ்வியலை வாழ்ந்த கட்டடக்கலைஞரான ம.வேல்மணி அவர்கள் எமது கிராமத்து வரலாற்றில் தனக்குரிய சிறப்புக்களோடு என்றைக்கும் வாழ்வாங்கு வாழ்வார்.

**வெ.துஷ்யந்தன்**

# இளையவி வடிவேல் (அருந்துரை) (1937 – 2017)

– கனகசபாபதி செல்வநேசன் –

இன்றைய எமது கல்விச் சமுதாயத்தின் ஆரம்ப காலம் சுய தொழிலிலேயே தங்கியிருந்தது. குறிப்பாக பனையும் பனை சார்ந்த உற்பத்திப் பொருட்களும் எம் சமுதாயத்தின் வாழ்வாதாரத்துக்கு முதுகெலும்பாக விளங்கிய காலம் அது. இப்படியான காலப்பகுதியில்தான் எமது அல்வாய்க் கிராமத்தின் கொக்கட்டியாவளவுக் குறிச்சியில் இளையவி தெய்வானை தம்பதிகளுக்கு ஐந்து பெண் பிள்ளைகளுக்குப்



பின்னர் ஆறாவது குழந்தையாகப் பிறந்தார் இளையவி வடிவேல் அவர்கள். ஐந்து சகோதரிகளுக்குப் பிறகு பிறந்த ஒரே ஆண்பிள்ளை என்பதால் அருமையான துரை என்றழைத்து அருந்துரை எனச் செல்லமாய் அழைக்கப்பட்டு நாளடைவில் இயற்பெயர் மருவி அருந்துரை எனும் பெயர் நிலைத்து விட்டது.

ஆரம்பக் கல்வியை தேவரையாளி சைவ வித்தியாசாலையிலும் பின்னர் நெல்லியடி மகா வித்தியாலயத்திலும் தொடர்ந்தாலும் குடும்பப் பொருளாதார நிலைமை காரணமாகப் படிப்பை இடையில் நிறுத்தவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார். மைத்துனர்களின் ஆலோசனைப்படி அவர்களின் கண்காணிப்பில் மரபுத் தொழிலான சீவல் தொழிலைப் பயின்று படிப்படியாக முன்னேற்றங் கண்டார். ஓய்வு நேரங்களில் பாதணி உற்பத்தித் தொழிலையும் பயின்றார். தான் செய்கின்ற தொழிலை நேர்த்தியுடனும் அர்ப்பணிப்புடனும் தன் மெய் வருத்தி தனது உடல் ஒத்துழைக்கும் வரை நேர்மையுடன் செய்து சீரும் சிறப்புடன் வாழ்ந்தார்.

இக்காலத்தில் தனது சகோதரிகளின் குடும்பங்களையும் பொருளாதார நெருக்கடியிலிருந்து காப்பாற்றி அவர்களின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கும் முன்நின்று ஊக்குவித்தார். அதன் பயனாக அவரது சகோதரியின் மகனான திரு.மார்க்கண்டு கருணாநிதி(பேராசிரியர் கொழும்பு பல்கலைக் கழகம்) அவர்களைக் கல்வியியலாளராக்கி கலாநிதிப் பட்டம் பெற்று உயர்ந்த நிலைகண்டு மகிழ்ந்தார். அது மட்டுமன்றி அயலவர்களையும் அரவணைத்து தன்னாலான உதவிகளைச் செய்து சிறந்த மனிதனாக மிளிர்ந்தார்.

இவர் கல்வி கற்ற காலங்களில் கவிஞர் மு.செல்லையா தலைமை ஆசிரியர் மற்றும் ச.சிவகுரு ஆசிரியர் ஆகியோர் தனது குடும்ப பொருளாதார நிலை கண்டு தனக்கு சாப்பாடு புத்தகம் கொப்பிகள் மற்றும் உடுப்புகள் என்பன தந்து பாடசாலைக்குச் செல்ல ஊக்குவித்தார்கள் என்பதையும் மேலும் எமது மனோகரா சன சமூக நிலையத்தில் பொருளாளராகச் செயற்பட்ட காலத்தில் நிலையம் சார்பான அபிவிருத்திகளை முன்னெடுத்து மீதிப் பணத்தை முதன் முதலாக வங்கிக் கணக்கு ஆரம்பித்து வைப்பிலிட்டதையும் என்னுடன் உரையாடும்போது தெரிவித்தார்.

இவர் மனோகரா அணியின் அதி சிறந்த கரப்பந்தாட்ட வீரராகவும் விளங்கினார். யாழ் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மனோகரா அணிசார்பாகவும் அயல் கிராமக் கழகங்களின் சார்பாகவும் விளையாடி தனது விளையாட்டுத் திறனை நிருபித்தார். இவர் விளையாடிய காலம் எனது சிறுபராயம் இவரோடு எனது மாமன் கந்தையா பரமானந்தனும் எமது அணிக்காக வெளியூர்களில் விளையாடிய காலத்தில் என்னையும் இவரது மகன் நித்தியானந்தனையும் உடன் அழைத்துச் செல்வார்கள். இதனால் அவரது விளையாட்டை பார்க்கும் பாக்கியம் எனக்கும் கிடைத்தது.

மேலும் இவர் ஒரு சிறந்த வாசகனாகத் திகழ்ந்து கடைசிவரை வாசிப்பைத் தொடர்ந்தவர். கட்டைவேலி பிரதேசசபை சார்பாகச் சிறந்த வாசகன் எனும் விருதினையும் பெற்றவர். 1963ம் ஆண்டு சீவல் தொழிலில் ஈடுபட்டபோது ஏற்பட்ட கடுங் காற்றில் பனைமரம் முறிந்து வீழ்ந்ததில் மிகவும் ஆபத்தான நிலையில் யாழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று அதிசயிக்கத் தக்க வகையில் மீண்டு வந்து மீண்டும் தொழில் செய்து மனைவி பிள்ளைகளுடனும் சகோதரிகளின் குடும்பத்தினருடனும் பிள்ளைகளுக்கு வேண்டிய பொருளாதார வசதிகளை ஏற்படுத்தி மிகச் சிறப்பாகவும் மகிழ்வுடனும் வாழ்ந்து 2017ம் ஆண்டு ஆடி மாதம் இயற்கை எய்தினார்.

---



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி செந்தூரன் ராதிகா அவர்கள் நியூசிலாந்தில் மேற்படிப்பை மேற்கொண்டு எமது ஊரின் முதல் பெண் கலாநிதிப்பட்டத்தைப் பெற்று எமது ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.



வடமாகாண சபையின் கல்வி பண்பாடு மற்றும் விளையாட்டு துறை அமைச்சின் 2020 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருதை திருமதி பரணீதரன் விஷ்ணுவர்த்தினி அவர்கள் பெற்றுள்ளார். எமது ஊரின் முதல் இளங்கலைஞர் விருதைப் பெற்று எமது ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.

## நாடகக்கலைஞர் மயிலு இராசரத்தினம்



*1938.10.28 இல் மயிலு பாக்கியம் தம்பதிகளுக்கு மயிலு இராசத்தினம் மகனாக பிறந்தார். இவரது தந்தையார் மயிலு "அங்குலன்" என்னும் நாடகத்தில் நடித்துள்ளார். இவர் யா/தேவரையாளி இந்துக்கல்லூரியில் ஆரம்பக்கல்வியையும் இடைநிலைக்கல்வியை கரவெட்டி திரு இருதயக் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டுள்ளார். 1952 ம் ஆண்டு இருதயக்கல்லூரியில் மாணவராக இருந்த காலத்தில் "அப்பூதி அடிகள்" நாடகத்தில் முதன்முதலாக நடித்தார். அதன் பின்னர் 1955 இல் ஆர்மோனியக் கலைஞர் திரு.மு.பொன்னையா அவர்களின் இயக்கத்தில் இயக்கப்பட்ட "சகோதர பாசம்" என்ற நாடகத்தில் பெண்வேடமேற்று நடித்துள்ளார். 1957 இல் அண்ணாவியார் எஸ்.தம்பிஜயாவின் அண்ணாவியத்தில் "சீதா கல்யாணம்" என்னும் வரலாற்று நாடகத்தில் சீதையாக நடித்துள்ளார். மயிலு கணேசலிங்கம் அண்ணாவியத்தில் உருவான காத்தவராயன் கூத்திலும், நடிகநாதமணி மு.செ.விவேகானந்தன் அண்ணாவியத்தில் காத்தவராயன் கூத்தில் சின்னான், டாப்பர் மாமா, சாம்பன் வேடமேற்று நடித்துள்ளார். பூதத்தம்பி நாடகத்தில் ஒரு தடவை அந்திராசியாக வேடமேற்று நடித்துள்ளார். 1970 இல் தரகர் தம்பண்ணை என்ற நகைச்சுவை நாடகத்தில் ஹஸ்ய உணர்வு மிக்க காட்சிகளை இவர் மிகச் சிறப்பாக நடித்துள்ளார். முல்லைத்தீவு, வற்றாப்பளை, அச்சுவேலி, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், தமிழாராய்ச்சி மாநாடு, ரூபவாஹினி, அல்வாய் முத்துமாரி அம்மன் கோயில், அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் அரங்குகளில் நடித்துள்ளார். 75 இற்கும் அதிகமான நாடக மேடைகளில் நடித்துள்ள இவர் 1966 இல் இராசரத்தினம் அவர்களை திருமணம் செய்துள்ளார். இவரதும் இவரது மனைவியினதும் பெயர் "இராசரத்தினம்" என்பதும் குறிப்பிடற்பாலானது. இவருக்கு இரத்தினேஸ்வரன், ராதை என இரு பிள்ளைகள் இருக்கிறார்கள். கரவெட்டி பிரதேச கலைஞர்கள் கௌரவிப்பில் கரவெட்டி பிரதேச செயலகத்தால் "கலைஞான வாரிதி" பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். மேலும் கவிஞர் மன்றம், அட்சரம் பவுண்டேசன், பாலகணபதி சங்கமம் நிறுவனங்களால் கௌரவம் பெற்றுள்ள இவர் ஓய்வு நிலை மின்சாரசபை உத்தியோகத்தர். மாதகலில் V.V. வைரமுத்துவுடன் "அரிச்சந்திரா மயானகாண்டத்தில் நடித்துள்ளார்.*

– பரணீ

## பெண் ஆளுமை : சந்திரா சிவதாஸன்



*எமது மனோகரா மண்ணில் பிறந்த பெண்களும் எமது ஊரின் புகழை ஏதோ ஒருவகையில் பாரோங்க செய்தவர்கள். கல்வி, கலை, விளையாட்டு, சுய தொழில் என எமது ஊர் பெண்கள் ஊரின் வளர்ச்சிக்கு உதவியதோடு பெருமைக்கும் வழி சமைத்தார்கள். ஈழத்து இசை நாடக வரலாற்றில் எமது ஊர் சார்ந்த கலைஞர்களது பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. எமது ஊரில் ஒரு காலகட்டத்தில் அனேகமான பெண் பிள்ளைகள் இசை நாடகங்களில் நடித்து புகழ் பெற்றார்கள். அந்த வகையில் இசை நாடகத் துறையில் சிறந்ததொரு நடிகையாக விளங்கியவர் சந்திரா சிவதாஸன் அவர்கள். இவர் 1951.10.16 இல் செல்லையா தங்கைச்சியம்மா தம்பதியினருக்கு மகளாக பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/தேவரையாளி இந்துக்கல்லூரியிலும் உயர் கல்வியை யா/நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்திலும் கற்றார். இவர் பாடசாலைக் காலத்திலிருந்தே தன் நடிப்புத் திறமையை வெளிப்படுத்தியவர். பாடசாலைக்காலத்தில் தனிநடிப்பு, பாடல் போட்டிகள், சங்கீதப்போட்டிகள், தனிப்பாடல், நாட்டிய நடனம் போன்றவற்றில் பங்கு பற்றி பல பரிசில் களையும் பாராட்டுக்களையும் பெற்றவர். முதன் முதலாக செல்வராசா ஆசிரியரின் அண்ணாவியத்தில் பக்த பிரகலாதன் நாடகத்தில் நடித்துள்ளார். மார்க்கண்டேயன், ஸ்ரீ வள்ளி, ஔவையார், பக்தநந்தனார், நாடகங்களில் இவர் நடித்துள் ளார். மார்க்கண்டேயர், நாரதர், நந்தன் போன்ற வேடங்களைத் தாங்கி நடித்துள்ளார். அண்ணாவியார் ச.தம்பிஜயா அண்ணாவியத்தில் அவருடன் மார்க்கண்டேயர் நாடகத்தில் நடித்துள்ளார். கலாநதி த.கலாமணி அவர்களுடன் ஸ்ரீவள்ளி, பக்தநந்தனார் நாடகத்தில் நடித்துள்ளார். ஆர்மோனியக் கலையரான இவர், அரங்கேற்றம் அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது. 1965 ஆம் ஆண்டு அல்வாய் கவிஞர் மு.செல்லையா அவர்கள் பல அரசியல் மேடைகளில் இவரைக் கொண்டு பாடல்களைப் பாடுவித்துள்ளார். 1976 இல் சிவதாஸா அவர்களை திருமணம் செய்து கொண்ட இவரின் இரண்டு மகள்மாரும் பல நாடகங்களில் நடித்தவர்கள். மகன் சந்திரமேனன் அவர்களும் மிருதங்க கலைஞராகத் திகழ்பவர். தேவரையாளி இந்துக்கல்லூரி, அல்வாய் சாமாணந்தறை ஆலடிப்பிள்ளையார், ஸ்ரீலங்கா வித்தியாசாலை போன்ற இடங்களில் இவர் நடித்துள்ளார். சிறந்த குரல்வளம் மிக்க இவர் சுருதி ஒருங்கமைய பாடுவதில் வல்லவர். இவரது சகோதர் செ.செல்வராசா அவர்களும் சிறந்ததொரு மிருதங்க, உடுக்கு வாத்திய கலைஞர் ஆக விளங்குகிறார். சுய தொழில் மூலம் நலமான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். சுமார் 40 மேடைகளிற்கு மேல் இவர் நடித்து எமது ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.*

– பரணீ

## மயிலே வாராயோ?

கண்ணைக்கவரும் அழகினையே
கருதித் தந்தோர் யார் சொல்லாய்
விண்ணில் மழையைக் கண்டாலே
வியக்கும் நடனம் ஆடுவதேன்?

வெருண்டு பயந்து ஓடாதே
வேதனை எதுவும் தரமாட்டோம்
தருவோம் இனிய உணவுகளே
தளரா தெம்முடன் வந்திடுவாய்

மெல்ல மெல்ல நடைபயிலும்
மேன்மைக் கலையைப் பயிற்றினர் யார்
கல்வியும் இங்கே கற்றிடவோ!
கலைகள் பலவும் தேர்ந்திடவா!

அன்பாய் நீயும் வந்திட்டால்
ஆடிப்பாடி வாழ்ந்திடலாம்
இன்பச் சூழலில் வளர்த்திடுவோம்
இங்கே நீதான் வாராயோ.

- வே.த.தணிகாசலம்

## வளர் பிறை

அம்மா வெளியே வா அம்மா!
அழகாய் மேமலே பாரம்மா!
சும்மா இருந்த சந்திரனைத்
துண்டாய் வெட்டின தாரம்மா?

வட்டத்தோசை சுட்டதுபோல்
வானிலிருந்த சந்திரனைத்
துட்டச் சிறுவன் யாருடைத்தான்?
சொல்வாய் உண்மை தோன்றிடவே

மட்டிப்பயலவன் வெட்டி விட்டு
மற்றப்பாதியை எங்கெறிந்தான்
கிட்ட மினுங்குங் கட்டியெலாம்
வெட்டிய மிச்சத்துண்டுகளோ?

- கவிஞர் மு. செல்லையா

## அம்மா எந்தன் அம்மா

(சிறுவர் பாடல்)

அம்மா எந்தன் அம்மாதான்
அவளை என்றும் வணங்குவேன்
சும்மா என்னைப் பெற்றாளா
சுமந்து நொந்து பெற்றாளே

என்னை மடியில் கிடத்தி - நாளுமம்
எந்தன் மழலை கேட்பாளே
சிங்கக் குட்டி என்பாளே - அவள்
சிரித்துக் கொஞ்சி அணைப்பாளே

சோறு தீத்தத் துப்புவேன்
சூச்சூ சொல்லித் தீத்துவாள்
பாட்டுப் பாடத் தூங்குவேன்
பார்த்துக் கொண்டிருப்பாளே.

- மு.செ.விவேகானந்தன்

## காதல் கதை

நெஞ்சைப் பிளந்த பின்புதான்
தெரிய வந்ததாம்
இதயத்தை
காணவில்லை என்று
எவருக்குத் தெரியும்
என்றோ தொலைந்த கதை.

- த.கலாமணி

## கேலியான வேள்வி

பட்டுத்தெறித்த ஒளிக்கதிரில்
வெட்டிச்சரிந்தன வெள்ளாட்டுத்தலைகள்
அருவி கொட்டி ஓடும் ஆறுபோல்
குருதி கொட்டி நனைந்தது பூமி
பிணம் தின்னி மனம் குளிர
பிசகாது வசமானது வேள்வி
வேள்வியால் பிறந்தது கேள்வி
கேள்வியால் பிறந்தது வேள்வி
கேள்வியும் வேள்வியும்
எங்கள் வாழ்வில் கேலியானது

-செல்லக்குட்டி கணேசன்


Murrey Engineering consultancy

ENGINEERS & ARCHITECTS

Construction & Consultancy Services
Architectural Drawings( 2D & 3D Illustration)
Structural Drawings
BOQ
Innovative Solution for repair and Renovation
Quality controlled Services
Experienced Staff
Hogh Skilled Labours
Defect Reliability
100% Worth Economical Modern Designs
Introducing Green Concepts for zero carbon energy efficient buildings

Mob: 0773245814, 0719042624
Email - k.muralee@hotmail.com


## பல்கலைக்கழகம் செல்வோர்



யாழ் பல்கலைக்கழக உடற்கல்வி முழு நேர டிப்ளோமாவுக்கு இராஜேஸ்வரன் மதீசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



யாழ் பல்கலைக்கழக உடற்கல்வி பகுதி நேர டிப்ளோமாவுக்கு செல்வநாதன் இனியவன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிற் பரிபாலன சபைவரலாற்றுப்பதிவுகள்

■ தகவல் - கலாநிதி த.கலாமணி ■

- அங்குரார்ப்பண கூட்டம் 29.11.43 அன்று திரு க.பொன்னையா அவர்களின் தலைமையில் செயலாளர் திரு கா.கதிர்காமு அவர்களால் கூட்டப்பட்டது.
- 67 உறுப்பினர்கள் பரிபாலனசபை அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கினர்.
- 16.12.43 அன்று பரிபாலன சபைக்கான யாப்பு அங்கீகரிக்கப்பட்டு பரிபாலன சபைக்குரிய நிருவாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்
- இருவருடங்களுக்கு ஒரு முறை புதிய நிருவாகிகள் தெரிவு செய்யப்படுவர் என்ற யாப்புப் பிரமாணப்படி நிருவாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்

| ஆண்டு | தலைவர் | காரியதரிசி | தனாதிகாரி | மணியகாரன் |
|---|---|---|---|---|
| 1944/45 | ச.பழனி<br>ச.தம்பிஜயா | வ.மு.மயிலு | க.பொன்னையா | க.மகேசு |
| 1946/47 | வ.செல்லக்குட்டி | வ.மு.மயிலு | மு.வைத்திலிங்கம் | க.நற்குணம் |
| 1948/49 | பெ.சபாபதிப்பிள்ளை | ச.சிவகுரு | மு.வைத்திலிங்கம் | ச.செல்லப்பா |
| 1950/51 | பெ.சபாபதிப்பிள்ளை | வ.மு.மயிலு | மு.வைத்திலிங்கம் | ச.செல்லப்பா |
| 1952/53 | பெ.சபாபதிப்பிள்ளை | த.செல்வராசா | க.மகேசு | மு.சி.கதிரவேல் |
| 1954/55 | ச.சிவகுரு | ஆ.கதிரவேல் | மூ.நாகமுத்து | நா.க.கந்தையா |
| 1956/57 | ச.சிவகுரு | க.நமசிவாயம் | சு.சீவரத்தினம் | க.கிருஷ்ணபிள்ளை |
| 1958/59 | த.செல்வராசா | ஆ.கதிரவேல் | க.நமசிவாயம் | ச.செல்லப்பா |